தென்றல்

ஆசிரியர்:
கண்ணதாசன்

கே.எஸ்.ராமு

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, சித்திரை 18 (30-4-'60). சனிக்கிழமை | இதழ் 46

வாழிய தாத்தா! வாழிய வாழியவே!

"தொண்டென்றல் என்ன?"

"அதன் மொத்த சக்தியையும் வடித்துக் காட்டும் வார்த்தை வடிவம் என் தூரிகையில் பிறக்கமுடியாது. வயதில் சிறியவன்; அனுபவமில்லை."

"தொண்டின் வடிவம் எப்படி இருக்கும் என்ருகிலும் சொல்லமுடியுமா?"

"அது முடியும்! நான் அடிக்கடி தொண்டின் வடிவங்களைக் கண்டிருக்கிறேன். அவ்வடிவங்களுள் நான் இப்போது அடிக்கடி சந்திக்கும் வடிவம் சென்னையிலே உலவுகிறது. அந்த உருவத்திற்குப் பெயர் மயிலை சிவமுத்து!"

ஃ ஃ ஃ

ஆமாம்! மயிலை சிவமுத்து அவர்கள் தொண்டின் முழு உருவமாய் அலைவதைப் பார்த்திருக்கிறேன். காலையில்தான் அந்தச் சட்டையைப் போட்டிருப்பார்! மாலையில் பார்த்தால், அலைச்சலால் ஏற்பட்ட வியர்வும், சிதறிய மூக்குப் பொடியும் சட்டையை அலங்காரம் செய்யும்! கையில் பிடித்திருக்கும் கம்புக்குக்கூட ஓய்விருக்கும். ஆனால் அவர் கால்களுக்கும் கைகளுக்கும் ஓய்வேயிருக்காது! அலைந்து கொண்டேயிருப்பார். போகின்ற இடமெல்லாம் தமிழ் தமிழ் என்று சொல்லிக்கொண்டேயிருப்பார்.

மணி விழாக் கொண்டாடிவிட்ட வயது. ஆனாலும் செயலில் அலுப்பில்லை; உழைப்பில் தளர்ச்சியில்லை.

தமிழ் கற்ற பல புலவர்கள் இருக்கிருர்கள். அவர்களெல்லாம் செஞ்சோற்றுக்காகவே வாழ்கிருர்கள். இவர் மட்டும் செந்தமிழ் நாட்டுக்காக வாழ்கிருர். "ஆகாரம்!" என்ருல், "சைவ ஆகாரம்தான் எனக்குப் பிடிக்கும்!" என்பர் பலர். அகரத்திற்கடுத்த ஆகாரத்தைப்பற்றிச் சொன்னேம் என்பதை நினைக்க மறந்துவிடுவார்கள். அந்த விந்தைப் புலவர்களுக்கிடையே ஒரே ஒரு மனிதர் "கன்னித் தமிழே! நின் பணியே என் கடன்!" என்றுழைக்

கிருர் என்ருல், அவர் தாத்தா சிவமுத்துதான்!

அவரைப் பார்க்கும்போது சிலர் தமிழ்த் தொண்டராகவும், வேறு சிலர் சிறந்த அமைப்பாளராகவும் காண்கின்றனர். எனக்கு அவர் இவ்வாறுமட்டும் படவில்லை; அருமைத் தாத்தாபோன்ற குடும்பப் பாசமும் எழுகிறது. நான் அவரைப்பற்றிச் சொல்லும் போதெல்லாம் தாத்தா சிவமுத்து என்றே சொல்கிறேன்!

குழந்தை மனம், அனுபவத்தின் இயல்பு இத்தனையும் மிளிரும் அந்தப் பெரியவர் பலருக்கு மாலை சூட்டிப் புகழ்ந்து ஊக்கியிருக்கிருர். ஆனால் தன் கழுத்தை ஒரு மாலைக்காகக்கூட நீட்டியதில்லை! ஆமாம்! தன்னலமும் கருதவில்லை; புகழ் மழையும் எதிர் பார்க்கவில்லை. எல்லாம் ஊருக்கே! ஊரார்பேசும் தமிழுக்கே!

அண்மையில் சென்னை அன்பர்களனைவரும் கூடி, அவரைப் பாராட்டினர். அதற்கு அவரை இணங்க வைப்பதற்குத் தமிழாசிரியர்கள் பட்டபாடு ஒன்றல்ல; இரண்டல்ல. மாலையைக் கண்ட இடத்திலெல்லாம் தலையை நீட்டும் புகழ்ச்சிக்காரர்கள் வாழுமிடத்தில் இருவரும் இருக்கிருரே என்றெண்ணினேன்.

இவருக்கு எந்தக் கட்சியுமில்லை. கொள்கைமட்டும் உண்டு; இலட்சியம் மட்டும் உண்டு. குழாய்த் தண்ணீரில்தான் குளிக்க வேண்டுமென்றில்லையே! ஆற்று நீரிலும் குளிக்கலாம் அல்லவா? நம் பாட்டன் பூட்டனெல்லாம் எந்தக் குழாயை வைத்துக் கொண்டு குளித்தான்? தாத்தா சிவமுத்துக்கு, தமிழ் வாழ உழைப்பது கொள்கை. தன்னுட்சி பெற்ற தென்னகத்தைக் காண்பது இலட்சியம்!

பதவுரை, பொழிப்புரை கூறுவதோடு நிறுத்திவிட்டு, கோவில் உருண்டைக் கட்டிக்கு ஓடித் திரிந்தனர் "புலவர்"கள். இந்தஇழி நிலையை யாற்றி, ஒரு சிலரையாகிலும் நிறுத்தினுர். தன்மானத்தோடு வாழச் செய்கிருர். தமிழுக்கு உழைக்கச் செய்கிருர். இவை போதாவா, அவரைப் பாராட்ட!

இந்த உலகம் தூய்மையை மதிக்காத உலகம். அந்த உலகில் தமிழின் தூய்மைக்காகப் போராடும் அவருக்கு நம் வாழ்த்துரைகள்! வாழ்க! வாழ்க! தாத்தா வாழியவே! வையை மணலினும் பல்லாண்டு வாழியவே! ★

இவர் தொண்டின் சிகரம்; புகழின் உருவம்!

செழியன் உலா

சென்னை மாநிலம் பெற்ற பெரும் பயனாய் வந்துதித்தவர் மௌன குரு அவர்கள். அவர் தனது வட நாட்டுச் சுற்றுப்பயணம் முடிந்தபின் தமிழகத்திற்குத் திரும்பினார். அங்கே தான் கண்ட அற்புதங்களையும், பெற்ற அனுபவங்களையும் தொகுத்து, வகுத்துச் சொன்னார். அவற்றை இங்கே அப்படியே தருகிறோம்:

பம்பாயில் காமராசக் கோனார்!

“நீங்க எல்லாம் இவ்வளவு திரளா வந்து கூடி என்னை வரவேற்றதற்கு, என் நன்றி. அங்கே நான் கண்டதை, கேட்டதை எல்லாம் நானே விளக்க மாகச் சொல்ல விழைகிறேன்!

அதாவது ..நான் போனவுடன் பம்பாயிலே இறங்கினேனோ...இல்லை யோ...காங்கிரசு எம். எல். ஏக்கள் எல்லாம் மளமளன்னு திரண்டு வந்துட்டாங்க...சும்மா......ரெண்டு மந்தைக்கூட்டமிருக்கும்...அப்பாலே ஒருத்தன் வந்தான். இந்தியிலே பேசுன்னான். நான் என்ன ஆச்சாரி யாரா, பயந்தோட? சும்மா வரிக்கு வரி நாலு “ஹை! ஹை!” போட்டு, “நம்ம நேரு அச்சா ஹை! மிக நல்ல சச்சா ஹை! இந்திரா அவர் பச்சா ஹை!”ன்னு பேசி விளாசு விளாசுன்னு விளாசினேன். ஆள் அசந்துட்டான்; மயங்கி விழுந்துட் டான். அப்புறம் ‘கரம்சாய்’ இரண்டு கப்பை அவன் வாயிலே ஊத்தினேன். பின்னே தான் மயக்கம் தெளிந்து எழுந்தான். எழுந்ததும் சும்மா விட்டானா? “ஜீ! நீங்க எப்படி இந்தி கத்துக்கிட்டீங்க? இவ்வளவு அருமையாப் பேசுறீங்களே! ‘புரவி ரதம்’ ஓட்டிப்பழக்கமோ?” என்றான். ‘போடா போ! உன் இந்தியும் நாப்பழக்கம்; இங்கிலீசும் கைப் பழக்கம்!”என்றேன். அவனும் ஒத்துக் கொண்டான். நானும் புறப்பட்டேன்.

அங்கே அப்படியே தாதர், தாராவி, மாதுங்கா, கொலாபா எல்லாம் போனேன். எங்கே பார்த்தாலும் ஒரே உபசாரம். கிஸ்முஸ்ன்னு ஒரு நடிகையைக் காட்டினாங்க! நர்கிஸ்ன்னுஒரு பழங்கொடுத்தாங்க. எல்லாரையும் பார்த்துவிட்டு, கொஞ்சநேரம் கப்பலைப் பார்க்கப் போனேன். உடனே நானாவதிங்கிற ஆளோட கதையைச் சொன்னாங்க. “நானாவதி ஏன் கல்யாணம்பண்ணிக் கிட்டான்? பண்ணிக்கிட்டதினாலே தான், துன்பப்படறான்! என்னைப் போலத் தனிக்கட்டையாய் இருந் தால் என்ன? எங்க பெரியவங்க சொல்லியிருக்காங்களே, கடலாழம் கண்டாலும் பெண்டிர் நெஞ்சாழம் காணமுடியாதுன்னு! அதை மறந் துட்டீங்களா?” என்றேன். கப்பல் அதிகாரிகள்கூட என் கருத்துக்களை ஒப்புக்கொண்டனர்.

x x x

பாட்னாவில் விபீசணர்!

பின்னே பாட்னா போனேன். பாட்னாவிலே ஒரே ஆர்ப்பாட்டம். அதிலே ஓர் உண்மை உண்டு. சந்திரகுப்தன் என்கிறவனை ஆட்சி யிலிருந்து சாணக்கியன் கவிழ்த்திப் பிட்டு, நவநந்தர்களை அரசர்களாக்கி ஆட்சியில் ஏற்றியது அந்த ஊரில் தானாம். (கூட்டத்தில் ஒரே சிரிப்பு). ஓ...மன்னிக்கணும். நவநந்தர்களை வீழ்த்திப்புட்டுச் சந்திரகுப்தனை ஆட்சிக்குக் கொண்டுவந்தது அந்தப் பாட்னா விலேதானாம்! பாடலிபுத்திர மிங்கிறது அதன் பழம் பெயராம்!

‘அந்தச் சாணக்கியன்போல ஆச் சாரியார் தெற்கேயிருந்து வடக்கே வந்து கலாட்டா பண்றார்; நேருவை வீழ்த்தப்போறார்’ - இப்படி அங்கே பயம்! நான் போய், தெற்கேயிருந்து வந்த சாணக்கியன் மட்டும்தானே உங்கள் நினைப்புக்கு வர்றான்! ராமருக்கு ஒத்தாசை பண்ணின விபீசணன் நினைப்பில்லேயான்னேன்! ஒரே அப்ளாசு! என்ன நான் சொல்றது?...

x x x

காசியில் ஆணழகர்!

அடுத்தாப்பலே வாரணாசிக்குப் போனேன்! அப்பாடா! எவ்வளவு பெரிய ஊரு! அங்கே கங்கை ஓடுது: இன்னும் நூறு இருநூறு சாக்கடைகள் ஓடுகின்றன. ஆனா லும்...எந்தப் பக்கம் திரும்பினாலும் ஒரே நறுமணம். இங்கேயெல்லாம், மீனம்பாக்கத்திலே இறங்கினவுடனே மீன் நாத்தமும் பிண நாத்த மும் ஒரே அடியாய் மூக்கைத் துளைக்குது? அங்கே போயிட்டிங் கண்ணா காலையிலே ரோசா மணம்! மாலையிலே மல்லிகை மணம்! மத்தி யானம் முல்லை மணம்! இரவிலே கதம்ப மணம்! அப்பப்பா! எந்தத் தெருவுக்குப் போனாலும் பாரீஸ் ஈவினிங்கும், லண்டன் நைட்டுமாத் தான் மணம் வீசுது! நகரம்ன்னா அதுல்ல நகரம்! முனிசிபாலிட்டி நடத்தினா அப்படி நடத்தணும்; கார்ப்பரேசனானாலும் அப்படி நடத் தணும்! புது ஊரு பாருங்க... மயங்கிப் போயிட்டேன்...காசிக்குப் பெயர்தான் வாரணாசியாம்! இப்படி ஒருத்தன் சொன்னான். “போடா போ! அது இலக்கியத்திலே இருக்கா? சரித்திரத்திலே இருக் கா?”-இப்படியெல்லாம் கேட்டேன். அசந்து போயிட்டான்.

x x x

தில்லியில் மாடர்ன் மன்மதர்!

அப்புறம் பல ஊரைச் சுத்திப் போட்டு, தில்லிக்குப் போனேனுங்க. தில்லியிலே நகர சபை வரவேற் புங்க...படு பிரமாதங்க...என்னை இல்லாதது பொல்லாததெல்லாம் சொல்லிப் புகழ்ந்திட்டாங்க. “இந்திரா! சந்திரா! ஆணழகா! மாடர்ன் மன்மதா!” என்று என் னென்னவோ சொல்லிட்டாங்க... நான்கூடக் கொஞ்சம் தயங்கிட்டே னுங்க, நாம் இதற்கெல்லாம் தகுதி தானான்னு! அப்பாடா! தில்லியிலே நம்ம எம்.பி. ஒருத்தரு காத்துக் கிட்டிருந்தாருங்க; என்னை வர வேற்க. அப்படியே அவரு அறை யிலே பெட்டியைப் போட்டுவிட்டு, ஊரைச் சுற்றக் கிளம்பினேன். அப்போதான் இந்த நகர சபை வரவேற்பு மற்றதெல்லாம்...!

x x x

சென்னையில் பேருரை!

மொத்தத்திலே...வடநாடு வாழுது; தென்னாடு தேயுதுங்கறவங்களுக் கெல்லாம், இதைத்தான் சொல் வேன்!

அங்கே அவங்க நிம்மதியா படுக் கிறதுக்குக்கூட இடம் இல்லை! பாவம்! கட்டிலிலே ஒரு சாதாரண மெத்தையிலேதான் படுத்துக் கிடக்காங்க. நம்ம நாட்டிலே நாமெல்லாம் எப்படி ஆனந்தமா, சுதந்தரமா மரத்தடியிலேயும் பிளாட் பாரத்திலேயும் படுத்திருக்கோம். அந்த இன்ப வாழ்க்கை அவர் களுக்குக் கிடைக்கவே இல்லை!

நாம் நினைச்சபோதெல்லாம், ஆறி லேயோ குளத்திலேயோ ரெண்டு கைத் தண்ணி அள்ளிக் குடிக்கிறோம். அங்கே குடிக்கணுமின்னு கேட்டாத் தண்ணி கிடைக்காது. பாதாம்கீர், ரோஸ்மில்க், ஆரஞ்சுச்சாறு, ஐஸ் வாட்டர் முதலியனதான் கிடைக் கின்றன. பாவம்! இப்படி அவர்கள் தண்ணீர் இல்லாமல் படுற கட்டத் தைக் கண்டு என்னாலே பொறுக்க முடியல்லே!

பாவம்! அவங்களாலே நினைச்ச படி நடக்கக்கூட முடிகிறதில்லை. நாம் நம்ம ஊரிலே அடையுற ஆனந்தங்கூட, அவங்களாலே அவங்க ஊரிலே அடைய முடிய வில்லை!

இப்பச் சொல்லுங்க! வடக்கு வாழுதுண்ணு இடக்குப் பண்றானு களே சில மடப்பசங்கள்! அது உண்மையா?”

காமராசர் தன் அனுபவங்களை இப்படிக் கூறி முடித்ததும், ஓர் ஆள் அவசரமாக ஓடி வந்து, “அண்ணாச்சி வடநாட்டில் சுதந்தரா கட்சிக்குக் கருமாதி கொண்டாடியிட்டாங்க!” என்றார். உடனே கூட்டத்தாரெல் லாம், “அண்ணாச்சி காமராசு வாழ்க! வாழ்க!” என்று கூவித் தம் கடமையை முடித்துக்கொண்டனர். அந்தக் கூச்சல் முழக்கம், “மைக்” கைக் கிழித்தது; பந்தலை முட்டியது!

—மா. முத்துராமலிங்கம்.

திருச்சி-உறையூரில் 6-5-60 வெள்ளி மாலை 6 மணியளவில்

தொழில் வளர்ச்சி மாநாடும்

நடிப்பிசைப் புலவர்

கே. ஆர். இராமசாமி எம். எல். சி.

அவர்கட்குப் பாராட்டு விழாவும்

★

திறப்பாளர்: **அம்பில் தர்மலிங்கம்**

தலைவர்: சலகண்டபுரம் **ப. கண்ணன்**

பேசுவோர்:

அறிஞர் **அண்ணா** எம். ஏ., எம். எல். ஏ.

பேராசிரியர் க. **அன்பழகன்** எம். ஏ., எம். எல். ஏ.

ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.

★

இரவு 10-மணியளவில் திறந்தவெளி அரங்கில்

“தமிழ் வாழத் தலை கொடுத்தான்”

என்ற நாடகம் நடைபெறும்.

வரவேற்புக் குழுவுக்காக

எம். எஸ். மணி.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 30-4-'60 | இதழ் 46

முத்தா! முனியா! சாகிறாள் உன் சகோதரி! வேகாத உன் மனமென்ன கல்லா? இரும்பா?

ஞாயிறு எழுந்தும், வாழ்வு விடியவில்லை!

புது மலர் மலர்ந்தும், குழலில் ஏறவில்லை!

விழி இருந்தும், ஒளியில்லை!

சின்னப்பொண்ணுக்கு ஒரு பாலுசாமி இருந்தும், வாழ்வில்லை!

ஆறு குழந்தைகளுக்கு அப்பன் இருந்தும், சோறில்லை!

கழுத்தில் மஞ்சள் கயிறு இருந்தும் கலங்கித் துடித்துப் புலம்புகிறாள் தமிழச்சி ஒருத்தி, அங்கே!

ஆம்! பசும்புல் கம்பளத்தின் எழில் கண்டு, முழங்கிவரும் பேராற்றின் இசை கேட்டு, பாய்ந்துவரும் வேழத்தின் மறம் பார்த்து, பவளச் செவ்விதழார் பண்ணொலியும் சுவைத்து, எந்த மண்ணிலே பண்டிதர் விருந்துண்டாரோ, அந்த மண்ணிலேதான், என்னுடன் பிறந்த தமிழச்சி ஒருத்தி ஒரு வேளைச் சோற்றுக்கும் வழியற்று அலைகிறாள்!

ஆங்கில இசை முழங்க, "உலா வந்த தேனிலவே! தோகை விரித்த எழில் மயிலே!" எனக் கூடி நின்றோர் மகிழ்ந்தார்க்க, எந்த மண்ணிலே பண்டித விசயலட்சுமியின் மக்கள் நாட்டியம் ஆடிக்களித்தனரோ, அந்த மண்ணில்தான் சின்னப்பொண்ணு பெற்ற செல்வங்கள் ஆறு வாடுகின்றன!

கட்டிய கணவன் வாழ்கையிலேயே, ஆறுகுழந்தைகளைப் பெற்றெடுத்த தமிழச்சி வாடுகிறாள். ஒரு நாளில்லை; இரண்டு நாளில்லை; ஒன்பது திங்களாய், ஓயவில்லை இந்த ஓலம்!

கணவன் "மாதவி" மையலில் கிடக்கிறானா? இல்லை! அவன் கைகால்கள் முறிந்துவிட்டனவா? இல்லவே இல்லை! அவன் தன் மக்களையும் மனைவியையும் பேண மறுக்கிறானா? இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

நடந்தது இதுதான்: பாலுசாமியின் மனைவி சின்னப்பொண்ணு. ஈழத்து மண்ணிலே உழைக்கும் எண்ணற்ற தமிழருள் பாலுசாமியும் ஒருவன். மெய்யெலாம் சோர, கையெலாம் வலிக்க, அல்லல் பலபட்டுத் தலைமன்னார் "பியரி"லே உழைத்த பாலுசாமிக்குக் குழந்தைச் செல்வம்தான் வளர்ந்தது. அவனை "அத்தான்!" என்று அழைத்த சின்னப்பொண்ணு, அவனை "அப்பா!" என்றழைக்க ஆறு குழந்தைகளைப் பெற்றுத் தந்தாள். அவன் கொண்டு வரும் அற்ப ஊதியத்தில் குழந்தைகளும் அவர்களும் "ஏதோ" வாழ்வைக் கழித்தனர். இடையிலே பாலுசாமி தான் பிறந்த தமிழகத்தை, தன்னை ஈழத்திற்கு விரட்டி விட்ட தாயகத்தைப் பார்க்க வந்தான். நீண்ட நாள் பிரிந்திருந்த உறவினர்களை, நெடுநாளாய்ப் பார்க்காதிருந்த தாய் மண்ணை, அவன் பார்க்க வந்தான். ஆசை மனைவியையும் அருமைக் குழந்தைகளையும் மட்டுமே பார்த்துக்கொண்டிராது, அன்னை மண்ணைப் பார்க்க வந்தது அவன் தவறுதான்.

தாய் மண்ணில் புரண்டுவிட்டுக் கலம் ஏறினான். மனைவி வாழும் தலைமன்னாருக்குச் சென்றான். ஆசைக் கோட்டைகள் ஆயிரத்தைக் கட்டிக்கொண்டு, கப்பலை விட்டிறங்கிய அவனை, அழைக்கக் காத்திருந்தது "அப்பா!" என்றிடும் குழந்தைகளில்லை; "நீ கைதி!" என்றிடும் காவல் துறையினர்; சட்டப் புரவலர்கள்!

தாயகம் வந்து திரும்பிய பாலுசாமிக்குப் பயண விவரச் சீட்டுகளைப் பண்டிதரின் அரசு தரவில்லையாம். பயண விவரச் சீட்டுக்கள் இல்லாததால் பாலுசாமி இலங்கை அரசினரின் கைதியாக, தடுக்கப்பட்ட பிரயாணியாக, தலைமன்னார் தடுப்புக் காவல் முகாமிலே கிடக்கிறான்.

இந்தியத் துணைக்கண்டத்துக் கோலேந்திகள், பயண விவரச்சீட்டுக்களைத் தராததால், "என்ன செய்வது?" என்று தெரியாது விழிக்கின்றனராம், தலைமன்னார்வாழ் சட்டத்தந்தையர்கள். "அரசினர் விவகாரம் என்றால் ஒருநாள் இருநாளில் முடிந்துவிடுமா? சிலநாள் பொறுக்கத்தானே வேண்டும்?" என்று பேசலாம் இதயமில்லாதவர்கள். அதுவும் சரியென்று ஒப்பலாம் ஒரு சில நாட்களானால்... பாலுசாமியை என்ன செய்வதென்று சட்டம் தெரியாது விழிப்பதாகச் சொல்லிச் சொல்லி ஒன்பது மாதங்களைக் கழித்துவிட்டனர், இலங்கை அரச ஊழியர்கள். ஆம்! ஒரு நாளில்லை; இரு நாளில்லை; ஏறத்தாழ இருநூற்றி எழுபது நாட்களாய், இந்தக் கொடுமை! 1959-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தடுப்பு முகாமில் வைக்கப்பட்ட பாலுசாமியின் பிரச்னை, 1960-ம் ஆண்டின் ஏப்ரல் திங்கள் முடியும் இந்நாளிலும் முடியவில்லை!

சட்டப்படி, பயண விவரச்சீட்டுக்கள் தரவில்லை இந்திய அரசினர். அதற்கெந்தச் சட்டத்தைக் கொண்டு தீர்வு காண்பது என்றுகூடத் தெரியாது திகைக்கின்றனராம், ஈழத்தரசினர். சட்டப் பிரச்னைதானா குறுக்கிடுகிறது? இல்லை! அப்படி ஒரு சிக்கலைக் காட்டி, வந்துழைத்து வளம்பெருக்கிய தமிழர்களையெல்லாம் விரட்டியடிக்க நினைக்கிறது சிங்கள அரசு. அப்படி ஓர் ஐயமும் எழுகிறது எனக்கு,

ஒன்பது திங்களாய் ஒரு சிக்கலுக்குத் தீர்வு காணமுடியாத அளவு மூளையற்றவர்களா, இலங்கை சட்டத் தந்தையர்கள்? ஒரு தமிழனின் வாழ்வைக் கெடுப்பதில் அத்துணை ஆசையா, நேருவின் அரசுக்கு?

சின்னப்பொண்ணு வழக்கின் எந்த முடிவுக்கும்கூடத் தயாராகிவிட்டாள்... "இடைநாளில் என் கணவனைப் பிணையத்தில் (சாமீனில்) விடுங்கள்! அவர் எங்காகிலும் உழைத்து, ஏதாகிலும் கொணர்வார். அந்தச் சிறு வருமானமுமில்லாததால் எம் குழந்தைகள் வாடிவதங்குகின்றன! இரங்குங்கள்!" என்றும் கெஞ்சிக் கேட்டாள் இலங்கை அரசிடம். அதற்கும் மறுத்துவிட்டனர், எதற்கும் துணிந்த இதயமில்லாத சிங்களவர்கள்! என்னுடன் பிறந்த ஒரு சோதரி இன்னும் வாடுகிறாள், ஈழத்திலே! அவள் அதே நிலத்தில் வளர்ந்து வாழ்ந்தவள்; அங்கே வாழ அவளுக்கு மட்டும் உரிமையிருக்க, அவள் கணவனுக்கு மட்டும் ஏன் இல்லை?

கீழ்த்திசையில் கதிரவனின் பொன்னொளி எழுந்தும், வீட்டுக்குள் இருளா?

தோட்டமெலாம் மலர்கள் குலுங்கியும், அதைச் சூட உரிமையில்லையா?

உலகின் நலன் காணும் திறன்மிக்க விழி இருந்தும், அதன் இமையை இழுத்து மூடித் தைப்பதா?

சின்னப்பொண்ணுக்கு ஒரு பாலுசாமி இருந்தும் அவள் அலறித்துடிப்பதா?

பண்டிதர் தன் கடமையை ஒழுங்காய் முடித்திருந்தால், தானும் தமிழன் என்ற உணர்வுபெற்றுக் காமராசர் துடித்தெழுந்திருந்தால், பண்டாக்களும் டட்லிகளும் தமிழரைப் பந்தாடுவரா?

தன் நிலையை "டைம்சு ஆப் சிலோன்" என்ற ஏட்டில் எழுதிக் கண்ணீர் வடித்திருக்கிறாள், சின்னப்பொண்ணு!

காமராசரே! மூன்றரைக் கோடித் தமிழர்களைக் கட்டியாளும் நீங்கள் எண்பத்தைந்து இலட்சம் மக்களின் அரசைப் பாருங்கள்! உங்கள் நெஞ்சில் துணி விருந்தால் நேருவைத் தட்டிக் கேளுங்கள்!

நேருவைத் தட்டிக் கேட்கும் துணிவில்லாவிட்டாலும் போகிறது! உங்கள் நெஞ்சம் உணர்ந்து அந்தப் பேதைக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் விடுங்கள்! என் பங்குக்கு நான் அழுதுவிட்டேன்; உங்கள் பங்குக்கு நீங்கள் அழ வேண்டாமா?

வேறென்ன செய்வது? ஆட்சி என் கையில் இல்லையே! ★

நினைவூட்டுகிறோம்!

"தென்றல்" நெடுங்கதைப் போட்டி முடிவு நாள்

30-6-'60.

பரிசு ரூ. 500.

தென்பாண்டி நாட்டில் தேன்மழை! கவிதைப்புயல்!

கூடலரசன்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்லப்படுகின்ற சேதிகளைக் கணக்கிடவும், தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் திராவிடத்தின் பல பகுதிகளிலும் சில குறிப்பிட்ட இடங்களில் பெருமளவிலேயும் காத்திருப்போர் தொகை, எதிர்பார்த்து நிற்போரின் எண்ணிக்கை, மிக மிக அதிகம் என்பதை முன்னேற்றக் கழகத்தின் கிளைகள் நடத்துவிக்கும் கூட்டங்கள் உறுதி செய்து காட்டுகின்றன. பெரு நகரங்களும் சிற்றூர்களும் தங்களுக்குள், தினம் தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குரல் வலிவை ஒலித்துக் காட்டுகின்றன. கழகச் சொற்பொழிவாளர்கள் அனைவரும் எல்லா இடங்களுக்கும் சென்று தோழர்களைச் சந்திக்கமுடியாத நேரக் குறைவுகள் எல்லோருக்குமே ஏற்பட்டுவிடுகின்றன. கழகத்தின் சார்பிலே இயங்குகின்ற மேடைகள் அதிகமாகவே இருப்பதால் கொள்கை இலட்சியங்களிலே ஏதேனும் கோளாறுகள் உண்டோ என்று எவரும் இன்றுவரை சொல்லத் துணியவில்லை. கழகத்தின் எழுத்தும் பேச்சும் எத்தனைக்கெத்தனை அதிகமாக இருக்கின்றனவோ அதற்கு நேர் முரண்பட்ட வகையிலே கழக இலட்சியங்களைப் புரிந்துகொள்ளமுடியாத நிலையில் கழகத்தின் எதிரிகள் எனப்படுவோர் இருக்கின்றனர். அறிவாளரும் அறிவிலிகளும் நிறைந்த எதிர் முகாமிலே நல்லவர்களும் புல்லறிவாளரும் தங்களுக்கு வேறுபாட்டினைக் காட்டிக்கொள்ளாமல் ஒரே நிலையிலும் ஒரே முறையிலும் கழகத்தை எதிர்ப்பதைக் காண்கிறோம். தெளிந்த அரசியல் வாதியும் குழப்பத்திற்குப் பெயர் போன அரசியல் கூலியும் ஒரே பாணியில்தான் முன்னேற்றக் கழகத்தைப்பற்றி முடிவு சொல்கிறார்கள். அமைச்சர்களும் சரி, அமைச்சர்களாக இருக்கத் தகுதியும் திறமையும் இல்லாதவர்களும் சரி, அமைச்சர் பதவிகளை எதிர்பார்த்து ஏமாந்தவர்களும் சரி, இருக்கின்ற அமைச்சர்களைக் கீழே இறக்கக் குழி பறிப்பவர்களும் சரி, பறிக்கப்பட்ட குழியில் தவறி விழுந்துவிட்ட பரிதாபத்துக்குரியவர்களும் சரி-இப்படி விலக்கமுடியாத எல்லா வகையான மனிதர்களும் கழகத்தைத் தாக்கித் தகர்த்துவிடத் தயாராகிக் கொண்டுள்ளார்கள். எனவேதான் கழகத்தின் பணி மற்ற மற்ற கட்சிகளைக் காட்டிலும் விரிவாகவும் விரைவாகவும் விளக்கமாகவும் நடைபெற வேண்டியுள்ளது. எங்கேனும் ஒரு பகுதியில் துரோகப் புயல் வீசியவுடன் வேருடன் சாய்ந்துவிடும் உளுத்துப் போன கட்சியல்ல-உரமேறிப் போன விடுதலை இயக்கம் என்பதினாலேதான், எதிரிகளும் எத்தர்களும் ஏமாளிகளாகப் போகும் வகையில் கழகத்தின் சிறப்புக்கள் ஒளிவிட்டுக் கொண்டுள்ளன. இந்தப் பேருண்மையை நம் ஆசிரியர் கண்ணதாசன், நடிப்பிசைப் புலவர் இராமசாமி ஆகியோரின் மதுரை மாவட்டச் சுற்றுப் பயணம் உறுதி செய்து காட்டியது.

திராவிட முன்னேற்றக் கழகம் நாவலர் அவர்கள் சொல்வதுபோல எந்தப் பகுதியுடனும் தொடர்பு கொள்ளும் வசீகரத்தைப் பெற்றது. ரோசா மலரை எந்த பெயரிட்டு அழைத்தாலும் அதன் மணத்திலே மாற்றம் காண்பதற்கில்லை என்பதும் வல்லாரின் பொன்னான கருத்து. அதனை உறுதிப்படுத்தும் உயர் காவியமாக, உயிரோவியமாக மதுரைத் தோழமைக் கழகத்தார் கண்ணதாசன் இராமசாமி இருவருக்கும் பாராட்டு விழாவினை நடத்திக் காட்டினர். இதயமும் இதயமும் இணைந்து இலட்சியமும் இலட்சியமும் இறுகத் தழுவிக்கொண்டால் 'இன்பம் இன்பம்' என்ற அன்புப் பெருக்கும் அனைவரின் உள்ளத்திலும் இழைந்தோடும் என்பதை அங்கே காண முடிந்தது. விருந்தும், வினா விளக்கமும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்ட விவேகமும் என்றும் மறக்கமுடியாதனவாகும். அதன் பிறகு பிரிவு நேரம் வந்தது. வரவேற்கப்பட்டோரும் வாழ்த்துக் கூறியோரும் வணக்கம் பெற்றோரும் பிரிந்தனர்; தோழமை வளர்ந்தது. வளர வேண்டிய தோழமைக்கு வழி வகுக்கும் எண்ணத்துடன் பிரிந்தனர். மதுரையிலேலிருந்து பன்னிரண்டுமைல் தொலைவிலுள்ள அலங்காநல்லூர் கழகத்தின் பெரும் பாசறை! மதுரை மாவட்டத்தில் எவருக்கு அழைப்பு வந்தாலும் அவர்களையெல்லாம் தன்னகத்தே இழுத்துக்கொள்ளும் திறன் படைத்தது அலங்காரநல்லூர்! எனவே கண்ணதாசன்-இராமசாமி இருவரும் அங்கே பேச நேரிட்டது. எந்த வகையிலும் எதிர்ப்புக்களைச் சமாளித்துப் பழக்கப்பட்டுவிட்ட சந்தானம் அவர்கள் கூட்டத்தினைச் சிறப்பித்தார்! மாவட்டச் செயலாளர் முத்து, கண்ணதாசன், இராமசாமி ஆகிய மூவரும் பேசினர். கழகத்தின் இலட்சியப் பெருக்கத்தினையும் இதனை இழிவுபடுத்தி அழிவு வேலைகள் செய்யும் ஆளும் கட்சியினரையும் சிந்திக்க வேண்டினர். சிந்திக்க மறுக்கும் அவர்களின் சிறு செயல்களை எண்ணிப் பார்த்து செயல்படும்படி பொதுமக்களை வேண்டியும் கேட்டுக்கொண்டனர்! அந்தச் சிற்றூரில் சில மாதங்களுக்கு முன்னால்தான் அறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்கள்! அந்த இன்பம் குறையு முன்னே ஆசிரியரும் வந்தார்; நடிப்பிசைப் புலவர் இராமசாமியும் வந்தார்-மகிழ்ந்தனர்! தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் அரசியல் வளர்ச்சியில் நெடுந்தொலைவு சென்றுவிட்டார்கள் என்பதை இன்னும் உணராத பிண்டங்கள் - அதாவது வளர்ந்து உருவாகும் பக்குவம் பெறாதவர்கள் காங்கிரசுக் கட்சியிலே அதிகம் உண்டு! அவர்கள் தங்களின் ஓய்வுநேரத்தில் கிராமத்தின் திசை மாற்றங்களை உணர்வது நல்லது! இந்த அலங்காநல்லூர் பகுதி எம். எல். ஏ. தான், "நான் மூன்று லட்சம் செலவழித்து எம். எல். ஏ ஆகியிருக்கிறேன். உங்களுக்கேன் உழைக்க வேண்டும்" என்று திமிரோடு கேட்டாராம்! இது உண்மையானால், கண்டிப்பாக அவர் கெட்டழிவார். சட்ட சபையை விட்டுச் 'சாகப் போகிற' நேரத்தில் சத்திர சேகரன்கள் சாகசம் பேசுவர் என்பதையும் அந்த மக்கள் மறந்துவிடப்போவதில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாழ்விலும் தாழ்விலும் தங்கள் இதயங்களைப் பதிய வைத்து எண்ணங்களை உருவாக்கிக்கொண்டுள்ள சின்னாளபட்டித் தோழர்கள் ஆசிரியர் கண்ணதாசன், கே. ஆர். இராமசாமி இருவரின் சொல் கேட்கச் சூழ்ந்திருந்த மக்களிடத்திலே பாராட்டினைப் பெற்றனர். கண்ணதாசன் அவர்கள் கவிதைத் தென்றலும் இலக்கியச் சுவையும் இணைந்தும் பிணைத்தும் செல்லும் வகையில். கழகத்தின் அரசியல் நெறி முறைகளையும், வடவர் தம் ஆட்சியின் வஞ்சகச் செயல்களையும், வக்கும் வகையுமற்ற வடநாட்டுக் கங்காணிகளையும் மக்கள் மன்றத்திலே நிறுத்தி மானங்கெட்ட போக்கினை விளக்கிக் காட்டினார். மேல் சட்ட சபையின் கழக உறுப்பினராகிவிட்டமைக்குப் பெரும் பாராட்டுப் பெற்ற இராமசாமி அவர்களும் நாட்டுப் பிரிவினையின் தேவையைச் சொல்லித் திரண்டுவரும் பெரும் படைக்கு அழைப்பினை விடுத்தார். அருகிலுள்ள மேட்டுப்பட்டிக் கிராமத்தில் கலைவாணர் நினைவு மன்றத்தைத் திறந்து வைத்தார் நடிப்பிசைப் புலவர்! சின்னாளபட்டியில் கழகத் தோழர்களின் அன்புரைகளுக்குப்பின் பயணம் பெரியகுளம் நோக்கித் துவங்கியது. இரவு பன்னிரண்டு மணி அளவிலே பெரியகுளம் வழிப்போக்கர் விடுதியில் கழகத் தோழர்கள் காத்திருந்து வரவேற்றனர்! நகரத்தின் எல்லையைத் தாண்டி இயற்கை எழிலும் மலைமுகட்டின் பனிபடர்ந்த காட்சிகளும் விடுதியை ஒட்டிய நீரோட்டமும் இதயத்தை மகிழ்வித்தன. கண்ணதாசன், தான் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் அந்தப் பகுதியிலே பயணம் செய்த கதை கூறி, சின்னமனூரில் நடைபெற்ற தமிழ் இளைஞர் மாநாட்டினைச் சிறப்பித்துச் சொன்னார். பெரியகுளம் கழகத்தின் வளர்ச்சி நிதி சிறப்புக் கூட்டத்தில் முத்து அவர்களின் தலைமையுரைக்குப்பின் கண்ணதாசன் அவர்கள் 'நேற்று-இன்று-நாளை' என்னும் பொருள்பற்றி முக்கால் மணி நேரம் பேசினார். கலையும் மொழியும் அரசியலும் வரலாறும், வீழ்ந்த இனம் அன்றொரு நாள் வாழ்ந்த வகைகளும் மன்றத்தைக் கவர்ந்தன. முன்னேற்றக் கழகத்தின் மேடையிலே நின்று எந்தத் தலைப்பினைக் கொடுத்தாலும் இலட்சியத்தின் உருவமாகவே சொற்கள் வெளிவரும் என்பதை அன்று கண்டேன். "நாட்டு விடுதலைக்குத் தமிழக மக்கள் நேற்று என்ன செய்தார்கள்? இன்று என்ன செய்கிறார்கள்? நாளைக்கு என்ன செய்வார்கள்?" என்பதையெல்லாம் விளக்கி, சிங்களத்து மக்கள் தமிழர்களைச் சுட்டுக் கொன்ற போதும் கருணை காட்டாத டில்லியையும், கண்டித்துப் பேசாமல் சொரணையற்றுச் செத்து பிழைக்கும் சென்னை அமைச்சர்களையும், அவர் தம் அயோக்கியத்தன்மைகளையும் அடுக்கிக் காட்டிய நேரத்தில் கேட்டவர் இதயம், துடித்தது; கண்ணீரும் வடித்தது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய நெறி முறைகளை, எண்ணத்திலே வளர்ந்து ஏற்புடைச் செயல் வகைகளினாலே செம்மைப்படுத்தி வரும் கே. ஆர். ஆர். அவர்கள் 'கலைஞரும் கட்சியும்' என்னும் பொருள் பற்றி அரை மணி நேரம் பேசினார். தன்னுடைய நாடகப் பணியையும் தான் நடிக்க இருக்கும் 'ஏற்றத் தாழ்வு' என்ற நாடக விளக்கத்தையும் கூறினார். வங்கக் கவிஞர் திரு. சட்டோபாத்யாயா அவர்களின் ஆங்கிலக் கவிதையொன்றின் சிறப்பினையும் அதனை மொழிபெயர்த்துச் சொன்ன சம்பத் அவர்களின் சொல் நயத்தையும், தனக்கே உரிய இதய வேட்கையுடன் விளக்கினார். தங்க மணிகளும் அணிகளும் வைரக்குவியலும் முத்தாரங்களும், குட்ட நோய்க்காரனின் மேனியிலே வடியும் புளுக்களையும் வறுமைப் புயலினையும் உருவாக்கும் வகை சொன்னபோது கவிதைத் தத்துவமும் தமிழின் சிறப்புக்குத் துணை சேர்க்கும் நடிப்பிசைப் புலவரின் நாடக வரவேற்பையும் காண முடிந்தது. பள்ளி வாழ்க்கையிலேயிருந்து தனக்கும் கழகத்திற்கும் உள்ள இலட்சியப் பெருக்கத்தை உள்ளத்தாலும் உடலாலும் பெருக்கிக் கொண்டேயிருக்கும் நண்பர் சோமு, பகல் உணவு படைத்திட்டார்! இதயத்துச் சிந்தனைகளையெல்லாம் முகத்திலே தேக்கிச் சொல்லுக்குச் சொல் வெற்றியைத் தேடும் கழகச் செயலாளர் நண்பர் அனீபா-அவருக்குக் கிடைத்த பாண்டியன், ஆறுமுகம், இவர்களைப் பின்தொடர்ந்து நடுநிசியிலும் இரு வண்ணக்கொடியேந்திக் கொள்கைக் குரல் கொடுக்கும் எண்ணற்ற நண்பர்கள்-அனைவரிடமும் விடை பெற்றுக்கொண்டோம். வானத்தின் கண்ணீர் தண்ணீராக விழுந்தது. உள்ளம் மகிழ்ந்தது. எங்கள் பயணம் மதுரை நோக்கித் தொடர்ந்தது! நிலக்கோட்டையில் இயக்கத்தின் நெடுநாளையத் தொண்டர் காத்தான் அவர்கள், பெருநீர்த் துளிகளைப் பெருவேகத்தில் தாண்டிக்கொண்டிருந்த வண்டியை எப்படித்தான் நிறுத்தினாரோ? நானே அறியேன்-தனது அன்பினை, நன்றியினை, 'சூடான முறையிலே'யே தெரிவித்துக்கொண்டார். தேநீர் குடித்துப் புறப்பட்டோம்!

—10-ம் பக்கம்—

நான்கு முதலமைச்சர்களின் முகத்தில் கரி!

எப்போதுமே, எல்லாத் துறைகளிலுமே, எப்படியேனும் தென்னக மாநிலங்களுக்குத் தீங்கிழைப்பது, அவர்கள் கொடுக்கும் வரிப் பணத்தை வாங்கி வைத்துக் கொண்டு வஞ்சனை செய்வது என்று கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்து வருகிறது வஞ்சக வடவராட்சி!

“தென்னகமா? தேய்ந்து அழிந்து, மறைந்து போகட்டும். நம் காலடியில் இருக்கும், நம் காலை நக்கும் கூலிகள் இருக்கும், நாடுதானே அது. இனி, பாடைகட்டி இடுகாடு நோக்கி செல்லட்டும்” என்கின்றனர். ‘நாளெல்லாம் பாடுபட்டு, நரம்பு தெறிக்க உழைத்து, இரத்தத்தை வியர்வையாக மாற்றிப் பணிபுரிவானும் அந்தப் பணியாள். ஆனால் அவனை மாட்டை உதைப்பதுபோல் உதைத்துவிட்டு, கொஞ்ச நேரம் ஏறிச் சவாரி செய்ததினால் குதிரை களைத்து விட்டிருக்கிறதே என்று அதைத் தட்டிக் கொடுத்து, உயர்தர விஸ்கி அதற்குக் கொடுக்கச் செயவானும், இதயத்திற்கு பதில் இரும்புக் கூடு பெற்ற எசமானன் ஒருவன்’ என்று கதை சொல்வது வழக்கம் பணம் பெற்று, அந்தஸ்து கொண்டு, எசமானன் உருவ தில் உலவிடும் மிருகங்களைப் ற்றி! ஆனால் அவர்களையும் மிஞ்சும்வண்ணம் வடவராட்சி தென்னகத்திற்கு அநீதி அக்ரமம் இழைத்து வருகிறது. இதைக் கேட்கக்கூடிய தைரியம், தட்டிச் சொல்லக்கூடிய துணிவு, ஆட்சிபீடமேறிவிட்ட ஆமாம் சாமிகளுக்கு எப்பொழுதுதான் ஏற்படப் போகிறதோ?

“எங்கே எசமானனை எதிர்த்துப் பேசிவிட்டால் கொடுக்கும் கூலி குறைக்கப்படுமோ? இருக்கும் வேலை பிடுங்கப்படுமோ?” என்று அடிமை அஞ்சுவதுபோல் தில்லி எசமானர்களிடம், “அடுக்குமா இந்த அநீதி? நாமெல்லாம ஒன்று என்று கூறிக்கொண்டு தென்னாட்டிற்கு மட்டும் ஏன் ஓரவஞ்சனை? தொழில துறையில் வஞ்சகம்; நீர்ப்பாசனத் துறையில ஓரவஞ்சனை! மற்ற மற்ற தபால், தந்தி போன்ற துறைகளிலும பாரபட்சம் காட்டுவது ஏன்?” என்று தட்டிக் கேட்டால், முட்டியை உடைத்து மூலைவீட்டில் நீ முடங்கு! என்று பதவியினின்று துரத்தி வேறு அடிமைகளை அமைச்சர்களாக்கிவிடுவார்களே ‘எல்லாம் வல்ல’ மத்திய வடவராட்சியினர் என்று அஞ்சி யஞ்சிச் சாகின்றனர், சந்தர்ப்ப வசத்தால இங்கு கொலுவேறியிருப்போர்.

சித்ரவதை செய்தால் முதுகெலும்பு இல்லாத புழுக் கூடத் துள்ளித் துடிப்பதுபோல் இங்குள்ள அமைச்சர் பெருமானகளுக்கு எப்பொழுதாவது “சொரணை” வந்து பேசிவிடுவதுண்டு. ஆனால் அப்படிப் பேசிய சில மணி நேரங்களுக்குப் பிறகு “ஆகா இப்படிப் பேசிவிட்டோமே. ஆபத்து அல்லவா வந்து அணைத்துக்கொள்ளும்? விபரீதம் அல்லவா வந்து வளைத்துக்கொள்ளும்?” என்றும் அஞ்சிச் சாவர்!

நமக்கு வாய்ப்பும் வசதியும் அவ்வளவு இல்லாமல், கருநாடகம் முழுவதும் நம கழகத்தின் கண்ணன கொள்கைகளைப் பரப்ப இயலாவிட்டாலும், நம்முடைய மகத்தான கொள்கைகளின குரல் மைசூர் சட்டசபையில் எதிரொலிக்கிறது என்றால், அது நம்முடைய கொள்கையின் வலிவினையும், பொலிவினையும், எழிலையும், கவர்ச்சியையும், தியாகத்தையும், வியூகத்தையும் மேன்மையையும், மென்மையையும், உயர்வையும், உண்மை நெறியையும் அல்லவா காட்டுகிறது!

கடந்த வாரம் ஏப்ரல் 8-ம் நாள் அன்று மைசூர் மாநிலச் சட்டமன்றத்தில் “அதிக இருப்புப்பாதை நம் மாநிலத்திற்குப் போட வேண்டும்” என்ற தனியார் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டது.

“ஆசன்-மங்களூர், ஊப்ளி-கார்வார், கோட்டூர்-அரிகார், பெங்களூர்-சேலம், பெங்களூர்-விராசபேட்டை, கடக்-ரெய்ச்சூர் ஆகிய பகுதிகளுக்குப் புகைவண்டி இருப்புப் பாதை போட மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி உடனே ஆவன செய்ய வேண்டும்” என்று ஏ. சே. தொட்டமத்தி எனும் காங்கிரசு உறுப்பினர் கொண்டு வந்த தீர்மானத்தை மாநில அரசு ஏற்றுக்கொண்டது.

அந்தத் தீர்மானத்தின் மீது உறுப்பினர்களும், அமைச்சரும் பேசிய போதுதான் நம் கழகக் கொள்கைகளின் எதிரொலி கேட்டது.

தான் கொண்டுவந்த தீர்மானத்தை வலியுறுத்திப் பேசிய தொட்டமத்தி “புது இரயில் இருப்புப்பாதைகள் போடுவதில் பொதுவாகவே தென்னாடு புறக்கணிக்கப்பட்டு வருகிறது. நாடு விடுதலையடைந்தவுடன் இது வரை மத்திய அரசாங்கம் மைசூர் மாநிலத்தில் ஒரு புது இரயில்வே பாதைகூடப் போடவில்லை.

இப்பொழுது ஏற்பட்டுள்ள புது அமைப்புப்படி மேற்குக்கடற்கரையை இணைக்கும் முகத்தான் இயிரல்வே பாதை இன்றியமையாததாகிறது. எனவே இப்பொழுது உடனடியாக மாநில சர்க்கார் இந்தத் தீர்மானத்தில் குறித்துள்ள இரயில்வே பாதைகளைப் போடும திட்டத்தைக் கட்டாயம் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும என்று மத்திய அரசாங்கத்திற்குமிக வன்மையாக வற்புறுத்த வேண்டும்.” என்று பேசினார்.

பி. வைகுந்த பாலிகா எனும் மற்றொரு காங்கிரசு உறுப்பினர் பேசுகையில் “குடகு பகுதியில், முழுக்க முழுக்க இருப்புப்பாதையே இல்லை. தென் - வடகன்ரா, சிக்முகளூர் ஆகிய பகுதிகளில் மிக மிகக் குறைந்த அளவிலேயே இரயில் பாதைகள் உள்ளன. எனவே இப்பகுதிகளிலும் இரயில்வே பாதைகள் போட மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்த வேண்டும்.” என்று குறிப்பிட்டார்.

இந்த உறுப்பினர்களின் பேச்சு ஏறக்குறைய நம் கழக உறுப்பினர்களின் பேச்சைப் போலவே இருக்கின்றது. ஆனால் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களே இப்படிப் பேசினார்கள் என்றால் இந்தத் துறையில் வடவர் கருநாடக மக்களை எவ்வளவு தூரம் வஞ்சித்து இருக்கின்றனர் என்பதை உணரலாம்.

இந்தப் பிரச்னை பற்றிய விவாதத்திற்குப் பதிலளிக்கையில ‘ரெவினியூ’ மந்திரி கடிலால் மஞ்சப்பா அவர்கள பூசி மெழுகி இருக்கிறார்கள். “இருப்புப்பாதைகளின் இன்றியமையாமையைப் பற்றி யாதொரு வேறுபாடும் இல்லையென்றாலும், மத்திய அரசாங்கம் ஓரவஞ்சனை காட்டுகிறது தென்னாட்டுக்கு என்பதை, ஒத்துக் கொள்ளமுடியாது.” என்று அவர் தனது “எசமான விசுவாச”த்தைக் காட்டிக்கொண்டிருக்கிறார்.

கடந்த வாரம், “தென்னாட்டிற்கு அநீதி” என்ற தலைப்பில் ஒரு கடிதம் “படிப்பவர்களின் பக்கம்” என்ற பகுதியில், வெளியிடப்பட்டிருக்கிறது, டெக்கான் எரால்டில். இந்தக் கடிதத்தை பெங்களூரைச் சேர்ந்த வி. டி. சீனிவாசன் என்பார் எழுதியிருக்கிறார். இதே கடிதத்தை அவர் சென்னை-கல்கி அலுவலகத்திலிருந்து வெளியாகும் “சுராச்சியா” என்ற ஏட்டிலும் வெளியிட்டுள்ளார்.

“ஏறக்குறைய பத்தாயிரம் கோடி ரூபாயில் மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் மத்திய அரசாங்கம் போடுகிறது. அந்தப் பேராசை’த் திட்டத்தில் மைசூர் மாநிலத்திற்கு ‘ஒரு அடி’ இருப்புப்பாதைகூடப் போடத் திட்டமில்லை. 1950-ல் ‘பொருளாதார ஒற்றுமை’ என்று ஒன்று அழலாக்கப்பட்டதில் மைசூர் மாநிலத்தின் இரயில்வே உடைமைகளை மத்திய அரசு ‘எடுத்து’க்கொண்டபோது ஒரு விதமான இழப்பு ஈடும் கொடுக்கவில்லை.

இது மட்டுமல்லாமல் பல ஆண்டுகளுக்கு முன்னரே மைசூர் மாநிலம் கேட்டுக்கொண்டிருக்கும் இருப்புப் பாதைகளுக்கு வேண்டிய என்சினீரிங், சர்வே போன்ற வேலைகள் எல்லாம் நடந்து முடிந்துவிட்டாலும், அந்த இருப்புப்பாதைகள் போடுவது பற்றிப் பேச்சு மூச்சுகூட இல்லை. ஒருமுறை இந்திய இருப்புப்பாதை நிலப்படத்தைப் பார்த்தால், வடநாட்டில் சிக்கலைப்போல் செல்லும் இருப்புப்பாதைகளும், தென்னாட்டில் அதற்கு எதிமாறாக இருப்பதும் நன்கு தெரியும்: இப்படியிருந்தும் வடநாட்டிற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதனால் வடநாட்டிற்கு ஆதரவும் அரவணைப்பும், தென்னாட்டிற்கு ஓரவஞ்சனையும் அநீதியும்தான் பரிசாக அறிவிக்கப்படுகின்றன என்று தெரிகிறது. ஆயிரக்கணக்கான இரட்டை இருப்புப்பாதைகள் வடக்கே! தென்னாட்டிலோ வருந்தத்தக்க அளவில் கண்ணீர்விட்டு நிற்கும் அரக்கோணம்-சென்னை 43 கல நீளத்தில் இரட்டை இருப்புப்பாதை மட்டும் தான்!

“சுதந்திரத்திற்குப் பிறகு மைசூர் மாநில இரயில்வே மத்திய அரசுககு அடிபணிந்ததும், அதைப் பற்றி மத்திய அரசு நினைப்பதே இல்லை” என்றும் அக்கடிதத்தில் எழுதுகிறார் அவர்.

“மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இருப்புப்பாதைகள் அமைப்பதில் தென்னகத்திற்குரிய பங்கைத் தரும்படி மத்திய அரசை வற்புறுத்தாவிடில், மைசூர், சென்னை, ஆந்திரம், கேரளம், ஆகியவற்றின் முதலமைச்சர்கள், தங்கள் கடமையிலிருந்து தவறியவர்களாவார்கள்!” என்று கூறித் தன் கடிதத்தை முடித்திருக்கிறார் தோழர் சீனிவாசன்.

தொடர்ந்து மைசூர் மாநிலத்திற்கு மத்திய அரசு இழைத்துவரும் அநீதியைக் கண்டு கருநாடக மக்கள் எவ்வளவு தூரம் உள்ளக் கொந்தளிப்புக்குஉட்பட்டிருக்கிறார்கள் என்பது, இவைகளில் இருந்து தெரியவருகிறது அல்லவா?

இழைக்கப்பட்டு வரும் அநீதி, காட்டப்படும் ஓரவஞ்சனை, செயல்படுத்தப்பட்டுவரும் அலட்சியம், அகம்பாவம், ஆணவம், திமிர், தென்னாட்டான்தானே என்னும் ஏளனம் முதலியன தூள் தூளாக உடைய, வடவராட்சி சுக்கு நூறாக ஆக இன்னும் நாள் தொலைவில் இல்லை.

கருநாடக மக்களின் உணர்ச்சி எரிமலையின் உள்ளேயே குமுறுவது போன்று உள்ளது. இனியும் தொடர்ந்து வடவராட்சி இப்படிப்பட்ட அநீதி, அக்ரமம் இழைத்து வருமானால் கருநாடகம் திராவிடத்தின் மற்ற அங்கங்களான, தமிழ்நாடு, கேரளம் ஆந்திரம் இவற்றோடு தோளோடுதோள் சேர்ந்து தூள் தூளாக்கும் வடநாட்டு ஏகாதிபத்யத்தை. இது உறுதி! உறுதி!! உறுதி!!!

—இரா. மதனகோபால்
பி. காம்., டி. ஐ. பி.

தலைமைக் கழக அறிக்கை-3/60

தி. மா. மு. கழகச் சட்டதிட்டக் குழு

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் வலிவுடனும் பொலிவுடனும் நாட்டில் வீறுநடை போடுகிறது. நல்லவர் உள்ளங்களில் மகிழ்ச்சி! நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் கொண்டோரிடமிருந்து ஆதரவு இதைக் கண்டுபூரிப்படையும் மாணவர்கழகம் தங்களின் எதிர்காலம் நல்லதாக அமைய, தமக்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பை வகைப்படியும், முறைப்படியும் மேற்கொள்ள, பெற்றோர்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் மாணவர்கள் மீதுள்ள நல்லெண்ணத்தை வளர்க்க மாணவர் கழகத்தைக் கட்டுக்கோப்புடன் நடத்திச் செல்ல, ஒரு சட்ட திட்டம் தேவைப்படுகிறது அத்தகைய சட்ட திட்டத்தை உருவாக்கித் தருமாறு திரு. டி. கே. பொன்னுவேலு பி. ஏ. அவர்களைச் செயலாளராகவும், தோழர்கள், ப. நெடுமாறன், எம். எஸ். வெங்கடாசலம், எம். ஏ., பி. இராசமாணிக்கம், பி. ஏ., பி. எல்., உ. கணபதி, எம். ஏ. இவர்களை உறுப்பினராகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் இருந்து ஆலோசனைகளைக் கூறுமாறு சிதம்பரம் வழக்கறிஞர் வி. வி. சாமிநாதன், பி. எஸ்ஸி. பி. எல். அவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தங்களுக்கு இட்ட பணியினை இரண்டு திங்களுக்குள் வெற்றிகரமாக முடித்துத் தருமாறு மாணவர் கழகத் தலைமை நிலையத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எஸ். டி. சோமசுந்தரம்,
பொதுச்செயலாளர்,
தி. மா. மு. கழகம்.

தலைமை நிலையம்,
“எழிலகம்”, சிதம்பரம்.

நா. சகந்நாதன் எம். ஏ.
சொல்கிறுர் :

★★★குறள் தரும் இன்பங்கள் கோடி ! கோடி !
அவை அனைத்தையும் உலகுக்கெலாம்
ஓடி உணர்த்த நான்

நினைக்கிறேன்

திருக்குறளில்தான் எத்தனை சிறப்புக்கள் உள்ளன! காலத்தால் அழியாத கருத்துக்கள் இடம் பெற்ற இணையற்ற நூல்; இலக்கணச் சிறப்புக்கள் அத்தனையும் ஒருங்கே கொண்ட ஒப்பற்ற நூல்; பாடல் நயம், கருத்துச் செறிவு, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், கூறியது கூருமை முதலிய பலபெருமைகள் பெற்ற நூல் இது. காலத்தாலும், இடத்தாலும் அழியாத நூல். (Thirukkural has conquered time and place) என்று ஆங்கிலத்தில் கூறப்படுவதுபோல் காலத்தையும், இடத்தையும் வென்ற நூல் இது என்று கூறுவது மிகையாகாது.

ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு விதச் சிறப்புக்கொண்டு விளங்குகிறது. ஒரு குறளில் ஒரே சொல் பல பொருள்களில் பயன்படுத்தப்பட்டு-அதே சமயத்தில் நல்ல கருத்துக்களை நாட்டு மக்களுக்கு வழங்கும் முறையில்-அதே நேரத்தில் ஏழு சொற்களுக்கு மேற்படாமல் அமைந்திருக்கும். ஒரு குறளில் பிறிது மொழிதலணியின் சிறப்பு காணப்படும். மற்றென்றில் பொருள் செறிவு காணக் கிடைக்கும். இன்னென்றில் எதுகை மோனையின் சிறப்பு இணைந்திருக்கும். இப்படிப் பல குறளும், பல சிறப்பைக் கொண்டு விளங்குவதைக் காண்கிறோம். ஒவ்வொரு குறளையும் வைத்து ஒரு தனிக் கட்டுரையே வரையலாம். காமத்துப்பாலில்உள்ள பல குறள்களைக்கொண்டு தனித் தனியே சிறு கதைகளும், நாடகங்களும் எழுதலாம். அவ்வப்போது திருக்குறளைப்பற்றி இத்தகைய கட்டுரைகள் வரைவது, "திருக்குறளில் இதுபோன்ற பல அரிய குறள்கள் உள்ளன; அவைகளைப் படித்துப் பாருங்கள் !" என்று கோடி காட்டத்தான். அத்தகைய குறள் ஒன்றைக் கீழே காண்போம் :

உவமானத்தைமட்டும் கூறிவிட்டு உவமேயத்தைக் கூருமல் விட்டு விடுதல் திருவள்ளுவர் கையாண்ட பல நயங்களில் ஒன்ருகும். அத்தகைய குறட்பாக்கள் நிறைய உள்ளன. அஃறிணைப் பொருள்களைஏராளமாகத் துணைக்கழைத்துக்கொண்டு தாம் கூற வந்த கருத்தை மறைமுகமாகக் கூறிச் செல்வார். திருக்குறளில் அஃறிணைப் பொருள்கள் நிறையப் பயன்படுத்தப்பட்டுள்ளன; அவற்றைப்பற்றித் தனி நூலே வரையலாம். நிற்க, கீழ்க்கண்ட குறளின் சிறப்பு என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள் ?

நெடும்புனலுள் வெல்லும்
முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற (495)

இந்தக் குறளுக்கு மேலெழுந்தவாரியாகப் பொருள் காண்போமாயின்-அதாவது இதில் உள்ள சொற்களுக்கு அப்படியே உரை கண்டால் முதலை நீரிலிருந்தால் எல்லா உயிரையும் வெல்லும், அது நீரைவிட்டால் மற்ற உயிர்களால் தோல்வி அடையும் என்பதாம். இக்குறள் 'இடன் அறிதல்' என்ற அதிகாரத்தில் வருவதால், நாம் வேறு பல பொருள்களைக் கற்பனை செய்துகொள்ள விட்டுவிட்டார் திருவள்ளுவர். அதற்குமுன்னுல் 'காலம் அறிதல்' என்ற அதிகாரம் வருவதால், அதற்கு முன்னுல் 'வலி அறி'தல் என்ற அதிகாரம் வருவதால், நாம் எவ்வளவு தூரம் கற்பனை உலகிற்குச் செல்லமுடியுமோ, அங்கு என்னென்ன அற்புதக் கருத்துக்களைக் காணமுடியுமோ, அவ்வளவையும் கண்டுவிட்டு வரலாம்.

ஓர் அரசன் ஒரு செயல் புரியத் தொடங்குவதற்கு முன்னுல் மாற்ருன் வலி அறிந்து, அந்தச் செயல் புரிவதற்கேற்ற காலத்தைத் தேர்ந்தெடுத்து, அதற்கொப்ப இடம் கண்டு அச்செயல் புரிந்தால் நிச்சயம் வெற்றி பெறுவான் என்பதற்காகத்தான், அக்கருத்துக்களை மூன்று அதிகாரங்களில் வலியுறுத்தியுள்ளார். மேலும் வலி அறிதல், காலம் அறிதல், இடன் அறிதல் என்ற மூன்று அதிகாரங்களைத் தொடர்ச்சியாகவும் அமைத்துள்ள கருத்து வியப்புக்குரியது. இடன் அறிதல் என்ற அதிகாரத்தில் வந்துள்ள இக்குறளின்கண் புதைந்துள்ள பொருள் என்ன என்று காண்போம் ஆயின் "எல்லோரும் தமது இடத்திலே வலியவராயிருப்பரென்பது சொல்லப்பட்டது" என்று ஓர் உரை ஆசிரியர் கூறுகிறுர். முதலை தண்ணீரில் இருக்கும்வரை, அதை எந்த உயிரும் வெல்லமுடியாது; அதே முதலை தண்ணீரைவிட்டு அப்புறப் படுத்தப் பட்டால், அது பிற உயிர்களின் கருணைக்குக் காத்திருக்க வேண்டும். இல்லையேல் மரணத்தைத் தழுவ வேண்டும். அதுபோல் அரசர்கள் தங்கள் இடத்திலே வலிமை உடையவராயிருப்பார்கள். ஓர் அரசனை அவனது சொந்த நாட்டில், சொந்த ஊரில் தோற்கடிப்பது என்பது சாதாரணமான காரியமல்ல; அப்படி ஓர் அரசனை வெளிநாட்டு அரசன் அவனது சொந்த ஊரிலேயே முறியடித்தான் என்ருல், அது உண்மையிலேயே பாராட்டுக்குரிய செயலாகும். முதலையைத் தண்ணீரிலேயே எந்தப் பிராணியாவது வென்ருல் அது பெருமைப்படத் தகுந்ததாகும் அல்லவா ?

இந்தக் குறளுக்கு ஓர் உரையாசிரியர் "நிலையாத நீரினிடத்தே பிற உயிர்கள் நிற்கமாட்டாமையால், அவை எல்லாம் முதலைக்கு எளியனவாகும். நிலத்தினிடத்தே முதலை சஞ்சரிக்கமாட்டாமையால், அவைகளுக்கெல்லாம் எளிதாமென்பது. மேற் செல்லும் அரசர் பகைவர் நிற்கமாட்டாத இடமறிந்து சென்ருல் அவர் அவனுக்கு எளியவராவர். தான் நிற்கமாட்டாத இடத்தே சென்ருல் அவருக்கு அவன் எளியவனுவான் என்கிற பொருள் தோன்ற நின்றமையால் இது பிறிது மொழிதலணி [illegible] என்று கூறுகிருர். ஓர் அரசனை வெல்ல வேண்டுமானுல், அதற்கு வேண்டிய படைகளும் படைக்கலன்களும், அதைப் பயன்படுத்த தளபதிகளும் இருந்தால் மட்டும் போதாது; போர் அரசனை எந்த இடத்தில், எந்தக் களத்தில் சந்தித்தால் வெற்றிபெற முடியும் என்பதை ஆராய்ந்து, அந்த இடத்தில் சந்திக்க வேண்டும். அங்கே வெற்றி பெறுவதுதான் உண்மையான வெற்றியாகும்.

இரண்டாவது உலகப்போரில் இந்தக் குறளுக்கான பொருளை நாம் கண்கூடாகக் கண்டோம். இட்லர் ஸ்டாலின் கிராட்டைப் பிடிக்க, அங்கேயே தன் படைகளை அனுப்பி பல போர் முறைகளைக் கையாண்டு முடிவில் தோற்று, மண்ணேடு மண்ணுகிப்போனுன். காரணம் அவன் இடம் அறிந்து போர்துவங்கவில்லை. "உருசியாவைஸ்டாலின் கிராடிலேயே தோற்கடிக்க முடியுமா? அதற்கு வேண்டிய இதர படைக்கருவிகளும், அவைகளை நடத்திச்செல்ல படைத்தலைவர்களிடமும் தன்னிடமும் போதியஅளவிற்குத் தைரியமும் இருக்கின்றனவா ?" என்று ஆராயாமல், குளிர்ப் பிரதேசமாகிய, உருசியாவின்மீது படை எடுத்தான்; முடிவில் பயங்கரமான தோல்வி அடைந்தான். இப்படிப் பல உதாரணங்களையும்கூறிக்கொண்டே போகலாம், இந்தக் குறளுக்குப் பொருத்தமாக வள்ளுவர் காலத்தே கூடப் பல அரசர்கள் இப்படி இடமறியாமல், ஆழந்தெரியாமல் காலை விட்டு, அவதிப்பட்டிருக்கவேண்டும் என்று நினைக்க இடமிருக்கிறது. இந்தக் குறள் எழுதுவதற்கான சூழ்நிலை வள்ளுவருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்; எனவேதான் முதலையை முதலாக வைத்து ஒரு குறள் பாடினுர். அந்தக் காலத்து அரசர்களுக்கு எடுத்துக்காட்டாய் இருந்த குறட்பா, இந்தக் காலத்து இட்லருக்கும் எடுத்துக்காட்டாய் இருக்கிறதென்ருல், காலத்தால், இடத்தால் அழியாத நூல் திருக்குறள் என்பது எத்தனை உண்மை என்பது புலப்படுகிறதல்லவா ? இத்தகைய நூலை உலகத்தில் வேறெந்த மொழியிலும் காணமுடியுமா ? இந்த நூலின் பெருமையை, இதில் இத்தகைய அரிய கருத்துக்கள் உள்ளன என்பதை, உலகமக்கள் அனைவரும் அறியச் செய்யவேண்டாமா ? திருக்குறள் ஓர் ஒப்பற்ற நூல் என்று கிணற்றுத் தவளைகள்போல் நாமே கூறிக்கொண்டிருந்தால் அது போதுமா ? மேலைநாட்டு மேதைகள், திருக்குறளில் இத்தகைய விழுமிய கருத்துக்கள் நிறைய உள்ளன என்று கூற வேண்டாமா ? அந்தச் சூழ்நிலையை இந்த நாட்டுப் பேரறிஞர்கள் உருவாக்க வேண்டும் !

திருக்குறளை நம்மவர்கள் இன்னும் அதிகமாகக் கற்கவேண்டும். கல்லாதவர்களுக்கு அதன் பெருமையையும், புகழையும் கூறவேண்டும்; திருக்குறள் தெரியாதவர்களுக்கு அதை விளக்கிடவும், அதில் உள்ள விழுமிய கருத்துக்களை எடுத்துக் கூறவும், நாள்தோறும் குறள் பெருமையைக் கூறவும் படித்தவர்கள் முன்வர வேண்டும். நாட்டிலே உள்ள மன்றங்கள் ஒவ்வொரு கிழமையும் திருக்குறள் வகுப்பு நடத்த வேண்டும்; அதிலே இத்தகைய சிறப்பு வாய்ந்த குறள்கள் உள்ளன என்பதை எடுத்துக்கூறவும், அந்தக் குறள்களுக்கு ஏற்ப நம் வாழ்க்கை முறைகளை நாம் அமைத்துக் கொள்ளவேண்டியதையும் கூறவேண்டும். திருக்குறளை அறியாத தமிழ் மகனே இல்லை என்று கூறும் வகையில் ஓயாது திருக்குறள் பிரசாரம் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு உலக மக்களுக்குத்தெரியப்படுத்தும் திருத்தொண்டை ஆங்கிலம் கற்ற தமிழறிஞர்கள் செய்ய முன்வர வேண்டும்.

"புதுமைக் குரல்" தரும் நடுநிலைமைக் குரல் !

கேள்வி :

தி. மு. கழகம் வளர்ந்து வரும் ஒரு விடுதலை இயக்கம். அப்படியிருக்க மாற்றுக் கட்சிகள் கேவலமாகப் பேசுகின்றனவே ! ஏன் ?

பதில் :

"என்னைப் பிறர் எவ்வாறு நடத்த வேண்டுமென்று நான் விரும்புகிறேனே, அவ்வாறு பிறரிடம் நான் நடந்து கொள்ள வேண்டும் !" — நான் சொல்லவில்லை; காந்தியடிகளின் வாக்கு !

[பி. சோ. இயக்கத் தோழர் அன்பு வேதாசலம் அவர்கள் தம் ஏடான "புதுமைக் குர"லின் 16-4-60 [illegible] ஒருவரின் வினவுக்கு விடை [illegible] புதுமை பேலே உள்ளன.]

★★★நண்பர் என். ஆர். தாசன் தான் கண்ட ஒரு கைவண்டிக்காரனின் வாழ்க்கையை வருணிக்கிறுர். ஆம்! இந்தச் சமுதாயத்தில் வாழத் தெரியா ஏமாளியான அவன்

மனிதச்சருகு

தார்ரோட்டின் சூடு தனது பாதங்களில் கொப்பளங்களாக உருவெடுத்து அலங்கரித்திருப்பதை அவன் குனிந்து பார்த்தான். கண்களில் உணர்ச்சியற்ற ஏதோ ஒன்றின் சாயல் படிந்தது.

கைவண்டி எதிரில் கிடந்தது.

தன் கைகளையும் வயிற்றையும் பார்த்துக்கொண்டான். அவை காய்த்துப்போய் கருப்பாகிக் கிடந்தன.

அவன் நினைவுகள் மெதுவாகச் சுழன்று கொடுத்தன.

கனமான மூட்டைகளையும் பெட்டிகளையும் வண்டியில் ஏற்றிக்கொள்வான். நாகரிக ஊர்தியை இழையும் நீண்ட வீதிகளில் அவனும் போட்டி போட்டுக்கொண்டு ஓடுவான்.

வியர்வை கொட்டும்; நெஞ்சு வலி எடுக்கும்; முதுகுவலியும் சேர்ந்து கொள்ளும்.

தனது வாழ்க்கையின் ஓட்டத்திலும், பரபரப்பிலும் அவனுக்கு அடிக்கடி, தனது இதயத்தைப் பற்றிய நினைப்பே மறந்துவிடும். அந்த நாகரிகமும், தனது பரிணும வளர்ச்சியில் தனது இதயத்தை எங்கோ நழுவ விட்டுவிட்டது. இல்லையென்றுல் தன் கண் எதிரில் நடைபெறும் மனித வாழ்க்கையின் அருவருப்பான கேலிக்கூத்தை எப்படிப் பார்த்துக்கொண்டிருக்க முடியும்?

அவன் விலங்காகிச் செத்தான். அந்த நாகரிகம்?...அதுவும் தன்னுள்ளே ஒரு மிருகத்தை மறைத்து வைத்திருந்தது. அன்பு, இரக்கம், பரிதாபம் இவை துளிகூட அற்ற கோர உணர்வின் மிருகம்! இரண்டு மிருகங்கள்!

'பின் மனிதன் யார்...?' அவன் சில சமயங்களில் திகைத்து நின்றுவிடுவான்.

சென்னை வீதிகளும், அங்கே நடைபெறுகிற நிகழ்ச்சிகளும் அவன் மனத்தைக் கசக்கிப் பிழியத் தவறுவதே இல்லை.

அழகான வீதிகளில் மனிதனின் அழகு உணர்ச்சியை உயிர் வடிவாகக் காட்டும் அத்தனையையும் கண்டான். மனிதர்கள்தான் எத்தனை அழகானவர்கள்! உடைகளும், நாகரிகச் சின்னங்களும்தான் எத்தனை உயர்வானவை!

அவைகளைக் காணும்போதெல்லாம் அவன் மனம் கூனிக்குறுகும். அந்த நாகரிகத்தின் கண்களில் கேவலத்தின் சகதி படிந்த அருவருப்பாய், தாழ்வுணர்ச்சிகளின் இருள் உறைந்த கருமையாய்த் தான் தோன்றுவதாக ஏதோ ஒரு அச்சம்! சென்னைக்குப் புதிதாக வருபவர்களின் வழக்கமான மனக்குழப்பத்தையே அவனும்அன்று கண்டான். ஆனல் இன்று?...எல்லாவற்றையும் கடந்துவிட்ட மனநிலை!

அனுபவங்களின் தாக்குதலில் இரத்தம் கக்கிவிட்ட அவனுக்கு, சென்னை புரிந்துவிட்டது. மனித உறவுகளின் அசைவுகள் ஒவ்வொன்றும் பணத்தை உரசிக்கொண்டிருப்பதை, அவன் புரிந்துகொண்டுவிட்டான்.

பக்கத்தில் கடல் அலைகள் குரல் ஓங்கி இரைந்தன.

இருளின் கரும்படைகள் மேற்கு வானில் குவியத் துவங்கின.

செந்நிறமான அந்தச் சேப்பாக்கத்துக் கட்டடங்களும், பல்கலைக் கழகக் கட்டிடங்களும் இருளின் வளைப்பில், இருளின் மறு உருப்போல் நிமிர்ந்து நின்றன. அந்தக் காட்சி அவன் உள்ளத்தைத் தொட்டது. அவன் மனத்தால் இப்பொழுதும் இருள் படிந்த நினைவுகளின் கோடுகளே நெளிந்தன:

"சென்னை வளர்த்து வைத்திருப்பது இவ்வளவுதான்! வெறும் கட்டிட நாகரிகம்! கட்டிடத்தை நீக்கிவிட்டால் மிஞ்சி நிற்பது நாகரிகமா? வெறும் வெட்டவெளி! மனிதனை நம்பி இருக்க வேண்டிய நாகரிகம், கேவலம் கட்டிடத்தை நம்பி வாழ்கிறது."

அவன் அதிகமாகப் படிக்கவில்லை. ஆனலும் சென்னை அவன் நினைவுகளைக் கூர் ஏற்றிக் கொடுத்தது. அதன் வீதிகள் பள்ளிக்கூடங்களாயின. அங்கே நடந்த நிகழ்ச்சிகள் பாடப் புத்தகங்களாயின.

பல்கலைக் கழகத்தின் உச்சியில் பொருத்தப்பட்டிருக்கும் கடிகாரம் எட்டு அடித்தது.

அவன் கைவண்டியைத் தள்ளிக் கொண்டு நகர்ந்தான்.

நாற்றத்தில் பிறந்து வளர்ந்த பக்கிங்காம் கால்வாயைக் கடந்து வெகு தூரம் வந்துவிட்டான் வீட்டின் நினைவு அவன் நடையில் வேகத்தைப் புகுத்தியது.

அவனுக்கு வீடு பிளாட்பாரம் தான். அதன் முனையில் எலும்புக் கூட்டை நினைப்பூட்டிக் கொண்டு கிடப்பவள்?...அவன் மனைவி என்ற நினைப்பிற்குப் பாத்திரமானவள்!

கைவண்டியை ஓரத்தில் நிறுத்தி விட்டு அவன் பிளாட்பாரத்தில் வந்து உட்கார்ந்தான். அந்த 'எலும்புக் கூடு' அவனை ஏறிட்டுப் பார்த்தது. முகமா அது? பய உணர்வுகளின் பயங்கரக் கனவு! இருளை வடித்தெடுத்த இருள்!

அவனுக்கு அந்த முகம் பழகிவிட்டது. அவனுடைய உணர்ச்சிகளில் எந்தச் சலனமும் இல்லை.

அவளுடைய பழைய வாழ்க்கை முழுவதும் அவனுக்குத் தெரிந்ததுதான்.

அந்த வாழ்க்கையின் நமைச்சலுக்கு தன் இளமையையும் சதையையும் இரை கொடுத்துவிட்டாள். அதற்குக் கைமாறு காட்ட அது தவறவில்லை. உடல் முழுவதையும் கருப்புத் திட்டுக்களால் அலங்கரித்தது. முகத்தில் சதைச் சின்னமே இல்லை. இருந்த இடத்தையும் சுருக்கங்களும் நோய் வடுக்களும் நிரப்பிக்கொண்டன. அழுக்கும் காவியும் ஏறிய பற்கள்கூட, அவள் கேவலத்தைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை. முன் வரிசையில் உள்ள இரண்டு மூன்று பற்கள் விழுந்திருந்தன. அவை தோற்றுவித்த இடைவெளியில் அவள் மானம் வதைபட்டுத் துடித்தது.

அவனைக் காட்டிலும் அவள் மூத்தவள்தான். அவள் முகத்தில் கிழடு தட்டித்தான் கிடந்தது. அதை அவன் அறியாமல் இல்லை. ஆனல்... அவனுடைய வயதின் ஏக்கமும் கசப்பான வாழ்க்கையும் அவன் கண்களுக்கு உண்மையை மறைத்துவிட்டன.

இளமை உணர்ச்சியில் கிடந்து நனைந்து நனைந்து கரைந்துவிட்டான். உணர்ச்சிகள் மரமரத்துப் போய் விட்டன. அனுபவங்களின் பிரசவ வேதனையில் புது மனம் பிறந்துவிட்டது.

பேச்சுத் துணைக்கு ஒருத்தி கிடைத்தால் போதும் என்ற நிலைக்கு வந்துவிட்டான். உடல் ஆசை அப்படி உணர்ச்சி வேறு. அத்தனையும் அடங்கி ஒடுங்கிவிட்டன.

தன் கையிலிருந்த காசை அவளிடம் நீட்டினுன். அதை வாங்கிக் கொண்டு இரண்டு மூன்று தடவை எண்ணிப்பார்த்தாள். அதற்குள் இடையிலேயே மூன்று முறை இருமிக் கொண்டாள். மார்பை பிடித்து முனகிக்கொண்டாள். அவள் முகம் மாறியது இயற்கையின் கோரத் தோற்றமா செயற்கையின் கோரம்!

'இத்தனை காசுதானு? பன்னியாட்டம் கொழுத்திருக்கே......இன்னும் கொஞ்சம் வண்டி இழுத்தா செத்துப் பூடுவையா?...' - அவள் கந்தலை இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்துவிட்டாள்.

அவன் பதில் பேசவில்லை. இது அவனுக்குப் பழக்கமானது.

இதைத் தவிர அவளிடம் அவன் எதையும் அதிகமாக எதிர்பார்க்கவும் இல்லை. அவளுடைய பேச்சு மரணப் பிடிப்பிற்குள் ஒடுங்கிக்கொள்ள சதா துடித்துக்கொண்டிருந்த அவனின் மனித உணர்வுகளை, அதனேடு உறவு கொள்ளாதபடி தூரத்தில் ஒதுக்கியே வைத்தது. அவளிடமிருந்து அவன் கண்டது திட்டல், எரிச்சல், கோபம் முதலியவை தாம். ஆனல அவை மனித உணர்வுகளாயிறறே! இறுகி ஒடுங்கி உருமாறிக்கொண்டிருந்த அந்த உணர்வுகளை, அவளின் திட்டலும் கோபமும் பழைய உருவத்திலேயே நிலைக்க வைத்தன. அவனை உலகத்தைப் பற்றி நினைக்க வைத்தன. அந்த நினைவில் ஓர் அமைதியைக் கண்டான். இல்லையென்றுல் அந்த விலங்கு வாழ்க்கையில அவன் கல்லாகி, மண்ணுகி, உயிரற்ற பொருளாகி மறைந்திருப்பான்.

தெருவில் அமைதி ஊர்ந்தது கொஞ்சநேரத்திற்குமுன் தெரிந்த பரபரப்பும், ஓட்டமும் ஒரு முடிவிற்கு வந்துவிட்டன.

'இதுதான் பட்டிணம்!'

அவளுடைய காலடியில் தலையை வைத்துக்கொண்டு அவன் படுத்துக் கொண்டான். அதில் அவனுக்கு ஓர் இன்பம்!

மறுநாள்!...

வண்டியை இழுத்துக்கொண்டு மெரினுக் கடற்கரையை ஒட்டி ஓடினுன். பக்கத்தில் ஒரு கூட்டம் தெரிந்தது. வண்டியை ஓரத்தில் நிறுத்தினுன். அந்தக் கூட்டத்தில் முண்டி அடித்துக்கொண்டு உள்ளே நுழைந்து பார்த்தான்.

கண்களில் இருள் கவிழ்ந்தது. திகைப்போடு அந்தப் பொருளையே கூர்ந்து பார்த்தான்.

பெரியதொரு சிலை அங்கே நிறுத்தப்பட்டிருந்தது. உழைப்பாளர்கள், சிலையாக வடிக்கப்பட்டிருந்தார்கள். 'உழைப்பின் வெற்றி' என்று அதன் கீழே எழுதப்பட்டிருந்தது.

அந்தச் சிலை இப்பொழுது அவன் கண்களுக்குத் தெரியவில்லை. முன்னுல் ஒரு நினைவுலகம் விரிந்தது. மௌண்ட்ரோட், மெரினுக் கடற்கரை, பைக்கிராப்ட்ஸ் ரோட், இங்கெல்லாம் ரிக்சாவையும் வண்டியையும் இழுத்துக்கொண்டு வாழ்வுக்கும் மரணத்திற்கும் விநுடிக்கு விநுடி நடக்கும் போராட்டத்தில நைந்து சாகிறுர்களே, அவர்கள் அவன் கண் முன் தோன்றினுர்கள். அவன் இதயம் விம்மியது.

'என்ன அற்புதம்!' எல்லோரும் புகழ்ந்தார்கள். அந்தச் சிலையிடம் அவனுக்குத் திடீரென ஒரு இனம் தெரியாத எரிச்சல்!

அந்தக் கூட்டத்தின் பார்வையெல்லாம் விழுந்து வழிகிற இடத்தில் போய் நின்றுகொண்டான். அவன் ஒன்றை எதிர்பார்த்தான். அது நடைபெறவில்லை. சிலை அவர்கள் கண்களில் பட்டது. அவன் அவர்கள் கண்களின் அருகில் செல்லமுடியாத அருவருப்பாகிவிட்டான்.

அவனும் அந்தச் சிலையை ஏறிட்டுப் பார்த்தான். பார்வையை நீர் மறைத்தது அவன் அழுதுவிட்டான்.

மூளை நரம்புகள் தெறித்துவிட்டது போன்ற ஓர் உணர்வு! உடற் சதையைக் கிழித்துக்கொண்டு எலும்புக் குருத்தைக் குத்துவதுபோன்ற ஒரு வேதனை!

வண்டியை இழுத்துக்கொண்டு ஓடினுன்.

ஆனல்... அந்தக் காட்சிமட்டும் மறையவில்லை. மாதங்கள் பல உருண்டும் வசந்தத் தளிர்போலவே நின்றது.

அவர்கள் குடும்பம் நடந்தும் பிளாட்பாரத்திற்கு வந்துவிட்டான். அவள் படுத்துக் கிடந்தாள. கண்கள் மூடிக்கிடந்தன. மூக்கின் மேல் கையை வைத்துப் பார்த்தான். அவனுக்குப் புரிந்துவிட்டது.

இனி அவள் அவனேடு பேச மாட்டாள். அவனைத் திட்டமாட்டாள. அது இயற்கையின் நியதி! மனிதனும இயற்கையும் செய்துகொண்ட ஒப்பந்தம்!

கன்னத்தைக் கையில் வைத்துக் கொண்டு மௌனமாக அவள் பக்கத்திலேயே உட்கார்ந்துவிட்டான். ஒரு விநுடியிலேயே அவன் உள்ளத்தில் காலப் பெருவெள்ளம்! மன உணர்ச்சிகளின் அடிப்படைகள் மீறிக் கிளம்பி ஆரவாரித்தன. அவை உடைந்து சுக்கல் சுக்கலாகி உருவிழந்தன.

வண்டியை இழுத்துக்கொண்டு அவன் ஓடிக்கொண்டிருந்தான்.

சிலையைச் சுற்றிலும் வழக்கம் போலவே கூட்டம் தெரிந்தது.

அது அவன் பார்வையில் பட்டது. ஆனல் அவன்?......இப்பொழுது பாதிக்கவில்லை; அழவில்லை.

ஆமாம்; அவன் அழமாட்டான்; குமுறமாட்டான்.

அவன் மனிதன் இல்லை; மனிதச் சருகு!

அதிலும் ஒளிவீசத் துடித்துப் போராடிச் செத்த மனிதச்சருகு. ★

கல்லூரிக் கவியரங்கம்

8. காதல்.

காலத்தை வென்றிட்ட காவியம் கண்டதனில்,
கோலத்தைக் கூட்டிக் கொடியுடலிற் போர்த்தன்ன
மேலாடை மாமதியும், மாண்பார் இளையோனும்
ஞாலம் மறந்திட்டு நல்லின்பந் துய்க்கின்ற
காதற் கவிதையினைக் கற்கவிலை யானுண்டேன்
ஆதலின் அன்றென்னைக் காதல்பற் றிற்றே.
மதிய மெழுகின்ற மாலைப் பொழுதில்
இதய மகிழ்வுடனோர் இன்சோலை சென்றிட்டேன்.
ஆய்ந்து ஒருகொழுவை அன்புத் துணையாகப்
பாய்ந்து தழுவுபல பைங்கொடி தான்கண்டேன்.
திங்கள் மறைந்திடத் தோன்றிய மையிருள்
தங்கும் நிறமுடை வண்டு களிரண்டு
தங்கள் நினைவிழந்து பாடா திருந்தனவே.
எங்குத் திரும்பினும் காதல்மிகும் இன்காட்சி
தேங்கிய வங்குத் திகைத்தேன் ஒன்றுகண்டு.
சங்கத் தமிழகத்துச் செய்திட்ட சிற்பமாய்
சேயிழையாள் அங்கொருத்தி பூக்கொய்து நின்றிட,
சேய்மையிற் சென்று சிறிது நோக்கினேன்.
செப்படி வித்தையோ நான்செய்த நற்பலனோ
ஒப்பியது நெஞ்சிரண்டும், ஒன்றுனேம் காதலால்.
கப்பிய இருளெமக்குச் சோகமாய் வந்திடவே
செப்பியே சென்றாள் கடற்கரையில் சேர்வளென.
'மாலை வருகின்றேன்' என்றந்த மான்விழியாள்
பாளை வெட்டித்தன்ன பற்குவியல் காட்டியே,
ஏழை எமக்களித்த இன்பத்தேன் வாக்குன்னி
சாலை மருங்கினிலே காதல் மயக்கத்தால்
ஊர்ந்து நடந்தேன் உலக மதைமறந்தேன்.
நேர்ந்த தெதுவோ நேரிய தென்றலொன்று
நான்நோக வென்னைத் தழுவித் தவழ்ந்ததுகாண்,
வான்நோக்கி ஓடியது வாடவிட் டென்னையே.
இப்படியாய் நானங்கே ஏங்கி இருந்தக்கால்
எப்படிச் செப்புவன் யான்கேட்ட இன்னிசையை.
நாடிய காதலன் ஊடலைத் தீர்க்கவே
பாடிய காதலியின் பண்ணினைப் போலவே
ஓ!ஓ!ஓ! என்றந்த ஏந்திழையின் இன்னிசை
வா!வா!வா! என்றே அழைப்பதுபோல் கேட்கத்
திரும்பியே பார்த்துத் திகைப்புடன் நின்றிட்டேன்;
அரும்பு முல்லை அழகு வரிசையோடு
கொங்கையிரு குன்றுகள் வெண்மணலில் நின்றிடத்
தங்கமுலாம் பூசப் படுத்திருந்தாள் மங்கையவள்.
பாலாவி யோடு பலவண்ணஞ் சேர்ந்தன்ன
மேலாடை யோடுமை வண்ணச் சுருளாம்
கூந்தலும் காற்றோடு, கூடி யிணைந்திட்டுப்
பாய்ந்து விளையாடிப் பாவைமேற் கிடந்ததுவே !
காணயான் வேண்டியவள் காத்துக் கிடப்பதைக்
கண்ட பொழுதே காதலாசை பொங்கிடக்
கட்டுக் கடங்காத ஆவல் விரட்டவே
பட்டு மெய்யாளின் பக்கம் விரைந்திட்டேன்.
கட்டாணி முத்தே ! கனிரசமே ! என்றவளைக்
கட்டி யணைத்திடக் கைநீட்டித் தொட்டக்கால்
ஐயோ எதுவுரைப்பன்; அவலம் ! அவலமே !
சாய்த்து விழவைத்த தென்னைக் கடல்திரையே.
அப்போது தானுணர்ந்தேன் மங்கையல்ல; கடலென்று;
குப்புற யென்முகத்தைத் தாழ்த்திட்டேன் வெட்கத்தால்.
எங்கிருந்து வந்ததோவெண் கலம்போல் நகைப்பொலி !
நங்கைஎன் காதலி அங்கிருந்தாள் எனைநோக்கி.
மங்கிய என்னறிவை மங்கைக்குக் கூறிடவே
ஓங்கிச் சிரித்திட் டோடிவிளை யாடினோம்.
'என்ன சிரிப்போ உறக்கத்தில்' என்றென்னை
அன்னை விளித் திட்டா ளே !

— பெ.போத்தி,

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.

வேண்டுகோள்

மறைந்த தலைவர் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள், சுமார் முப்பது ஆண்டுகட்கு மேலாகவே, பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பொது நலத்திற்காகவும், நீதி நியாயத்திற்காகவும், பாடுபட்டு வந்ததனை நாடு நன்கறியும்.

நீதிக்கட்சியின் கொள்கையை நிலை நிறுத்தவும், திராவிடத்தின் உரிமையைக் காக்கவும், தாழ்த்தப்பட்டோரை உயர்த்தவும் **'சண்டே அப்சர்வர்'** வார ஏட்டின்மூலம், அவர் அயராது பணியாற்றியதனை யாரும் மறக்கமுடியாது.

அவரது தொண்டால் வளர்ந்தது தென்னகத்தின் உரிமை வேட்கை. அவரது துணையால், சிறப்புரையால், செல்வாக்கால், நல்வாழ்வு பெற்றோர் பலப்பலர். அவரது இலட்சியத்தால் உயர்ந்தது நம்நாடு.

ஆனால், அவரது வாழ்நாளில் வளம் கண்டதில்லை அவர்; மாறாக வறுமைச் சுழலிலேதான் வாடினார். இன்றோ, அவரது அருமைத் துணைவியாரும் மக்களும், அவரையும் இழந்து அவர் விட்டுவைத்த வறுமைச் சூழலுக்கு ஆட்பட்டு வாடி வருந்துகின்றனர்.

அவர் நாட்டுக்கு ஆற்றிய நற்றொண்டுக்கு, நாட்டு மக்கள் தம் கடமையைச் செய்யத் தவறலாமோ? அவர் தம் குழந்தைகள் நல்வாழ்வு பெறச் செய்வது நன்றியுள்ளோர் கடனாகுமன்றோ? அந்தக் கடமையை நிறைவேற்றத் தக்கதொரு நிதி திரட்டப்பட்டாக வேண்டும். அதற்காக, நிதி திரட்டுவதற்கென்று அறிஞர் அண்ணா அவர்கள் "சந்திரமோகன்" நாடகம் நடத்தித்தர இசைந்துள்ளார்கள். அண்ணா அவர்களும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களும் பங்கேற்கும், சந்திரமோகன், வருகிற மே - 15 ஞாயிறு அன்று (15-5-60) மாலை 6-30 மணிக்கு திருவல்லிக்கேணி - வெங்கட்டரங்கம் பிள்ளை தெரு, பார்த்தசாரதி சபை அரங்கில் நடைபெறவிருக்கிறது. எனவே அந்த நாடகத்தினைக் கண்டு களிக்கும் வாய்ப்புடன், மறைந்த வீரர் பி. பா. அவர்கள் நினைவுக்கு நமது காணிக்கையைச் செலுத்தவும், நமது அன்புக்குரிய அவரது குடும்பத்தாருக்குத் தக்க உதவி செய்யவும், பெரியோர்களும்-தோழர்களும்-தக்க நன்கொடை வழங்கி, ஆதரவு நல்க வேண்டுகிறேன். நன்கொடை வழங்குவோர்-கீழ்க்காணும் தொகை குறித்த சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவும் (1) புரவலர்-நூறு ரூபாய், (2) காப்பாளர் - ஐம்பது ரூபாய், (3) ஆதரவாளர் - இருபத்தி ஐந்து ரூபாய், (4) நன்கொடையாளர் பத்து ரூபாய். மேலும் நாடகத்தன்று ரூ. 5 நன்கொடைச் சீட்டுகள் அரங்கில் கிடைக்கும்.

வெளியூர் நண்பர்கள்-இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்குத் துணையாகத் தங்களாலியின்ற நன்கொடையை எனது முகவரிக்கு (க. அன்பழகன் எம். ஏ., எம். எல். ஏ., 10, வேளாளர் தெரு, புரசை, சென்னை-7.) அனுப்பவேண்டுகிறேன். பத்து ரூபாய்க்கு மேற்பட்ட நன்கொடைகளுக்குப் பற்றுச்சீட்டுகள் அனுப்பப்பெறும் - மற்றவை, "நம்நாடு" "தனியரசு" ஏடுகளில் வெளியிடப்பெறும்.

நாடக நன்கொடைச் சீட்டுகள்-நாடக அமைப்புக்குழுப் பொருளாளர் பு. ரா. கோகுலகிருட்ணன் பீ. ஏ., பீ. எல்., 7, லார்டு கோவிந்தாசு நகர்ரோடு, மவுண்ட்ரோடு, சென்னை-2 என்ற முகவரியிலும், செயலாளர் க. அன்பழகன் முகவரியிலும் கிடைக்கும்.

நிதி உதவ, கடமை ஆற்ற, முன் வாரீர் என வேண்டுகிறேன்.

அன்பன்,

க. அன்பழகன்,
செயலாளர்,
"சண்டே அப்சர்வர்" பி. பா.
குடும்பநிதிக் குழு.

கருநாடகத்தில் கழகம் சந்திக்கும் முதல் களம்!

★★★ கருநாடகத்தில் தி. மு. கழகம் கலந்துகொள்ளும் முதல் தேர்தல் வருந் திங்களிலே நடைபெற இருக்கிறது. சிறிய தேர்தலானாலும், வரும் நாள் வரலாற்றில் முக்கிய இடம் பெறப் போகிறது, இத்தேர்தல். அதன் நிலை குறித்து, தேர்தல் களத்தை நேரடியாகக் கண்டுவந்த தோழர் கி. சோழன் எழுதுகிறார்...

இயற்கை எழில் கொஞ்சும் இனிமை மிக்க நிலப்பரப்பு; செவ்வாழைத் தோட்டங்களும், சென்றோர் கண்டு வியக்கும் செந்நெற்களஞ்சியங்களும், தென்னையும் கமுகும் இன்னும் பல கனித்தோட்டங்களும், நீலக்கரு முகிலோடு கூடிக் குலவி நிற்கும் மலைமுகடுகளும், வானளாவி நிற்கும் வன்மரங்கள் அடர்ந்து வளர்ந்த காடுகளும், சல சல என்ற ஒலியுடன் சிதறி ஓடும் சிற்றோடைகளும் அதில் துள்ளி விளையாடும் கெண்டை மீன்களும், அம்மீன்களோடு போட்டியிடும் மீன்விழி மாதரும், மண்வளம் மிக்க "இரியூரின்" சிறப்புக்களாகும்! மண்வளம் மட்டுமில்லை; மனவளத்திற்கும் அங்கு பஞ்சமில்லை! ஆதரவு தேடிவந்தோரை அரவணைத்து மகிழ்விக்கிறது இரியூர்! இன்று தமிழகத்திலே சூறாவளி எனச் சுழன்று சுயமரியாதைப் பிரச்சாரம் செய்துவரும் இணையற்ற அறிவுமேதை பெரியார் இராமசாமி அவர்களின் முன்னோர்கள் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்கள்தாம்! இன்று அங்கே கன்னடியரும் தமிழரும் ஒன்றுபட்டு வாழ்வதற்கு அச்சாரமாகத்தான் போலும் பெரியாரைத் தமிழகத்திற்குத் தந்து அவர்கள் பெருமை கொண்டிருக்கிறார்கள்! இன்று தென்னகத்து மண்ணிற்கடியில் புதைந்துகிடக்கும் பல கனிச்செல்வங்கள் - இருப்பது தெரிந்தும் கவனிப்பாரற்றுக்கிடப்பது போல், ஒரு காலத்தில் இரியூர் கவனிக்கப்படாமலேயே கிடந்தது; சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயர் ஆட்சி இந்த மண்ணிலே நிலவி வந்த காலத்தில் இரியூரிலிருந்து எட்டுக்கல் தொலைவில் உள்ள மாரிக்கணவாய் என்ற ஆற்றில் ஓர் அணைகட்டுவது என்று தீர்மானித்தார்கள்! அந்த அணையின் மூலம் வீட்பாரற்றுக் கிடக்கும் இலட்சக்கணக்கானஏக்கர் நிலத்தை நல்ல முறையில் செப்பனிட்டுப் பயன்படுத்தமுடியும் என்பதைக் கண்டனர்! "வாணி விலாச சாகர்" என்ற அந்த அணையைக் கட்டும்பணியினைத் துவக்கினர்; அந்தப் பணிகளுக்காகத் தொழிலாளர்கள் பலர் தேவைப்பட்டார்கள். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் தொழிலாளர்கள்அங்கு அழைத்துச்செல்லப்பட்டனர்! குறிப்பாக திருச்சி, கோவை மாவட்டங்களைச் சார்ந்தவர்களே பெரும்பாலோர் அங்கு சென்றனர்; அந்தக் காலத்தில் இரியூர் மலேரியா என்ற கொடிய நோய் பீடித்துக்கொள்ளும் இடங்களிலே ஒன்றாக இருந்தது; எனவே பலர் அங்குத் தங்கியிருக்க அஞ்சினர், மேலே குறிப்பிட்ட இரு மாவட்டத்தினரே துணிவோடு அங்கு தங்கினர்; பணியாற்றினர்; அணைக் கட்டை உருவாக்கினர். ஆனால் அத்தோடு அவர்கள் பணிமுடிந்து விடவில்லை. அதுவரையில் கவனிப்பாரற்றுக்கிடந்த அந்த நிலப்பரப்பைப் பண்படுத்தினர்; பயனுள்ளதாக்கினர்; அதற்குமுன் விலைபோகாமல் கிடந்த நிலங்கள் இன்று என்ன விலை கொடுத்தாலும் கிடைப்பது அரிது என்ற நிலையைஉருவாக்கினர்! இந்தப் பெரும் மாற்றத்திற்குக் காரணம், தமிழர்கள் அன்று அந்த மண்ணிலே உழைத்த உழைப்பும், சிந்திய வியர்வையும்தான் என்பதைக் கன்னட மக்கள் பெருமையோடு குறிப்பிடுகின்றனர்!

இரியூர் இன்று மைசூர் அரசினருக்கு நல்ல வருவாயைத் தேடித் தரும ஒரு பகுதியாகும். அங்கு சுமார் 14 ஆயிரம் தமிழர்களும், ஏறத்தாழ அதே அளவு கன்னடப் பெருங்குடி மக்களும் வாழ்கின்றனர்; அங்குள்ள கன்னடர்கள் நல்ல முறையில் தமிழ் பேசுகிறார்கள்; தமிழர்களும் அதேபோல் கன்னடம் பேசுகின்றனர். இருவரும் இணைந்தே வாழ்கின்றனர்; செயல்புரிகின்றனர்!

அண்மையில் இரியூருக்குச் சென்றிருந்த சென்னை மேயர் திரு. அப்துல் காதர் அவர்களை இரியூர் நகராட்சி மன்றம் வரவேற்று இனிய தேனீர் விருந்து ஒன்றும் நடத்தியது. நன்றி தெரிவித்துப் பேசுகின்ற நேரத்தில் மேயர் அவர்கள், தான் எந்த மொழியில் பேசவேண்டுமென்று கேட்டபொழுது தமிழிலேயே பேசுமாறு உறுப்பினர்கள் அனைவரும் கேட்டுக்கொண்டனர்; காரணம் அத்தனை பேருக்கும் நல்ல முறையில் தமிழ் தெரிவதேயாகும்! இப்படி முழுக்க, முழுக்க திராவிட ஒற்றுமையோடு திகழும் இரியூரில் வருகிற மேத் திங்கள் 18-ம் நாள் நகராட்சி மன்றத் தேர்தல் நடைபெற விருக்கிறது! கருநாடகத்தின் வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக இம்முறை நகராட்சி மன்றத் தேர்தலில் தி. மு. கழகம் போட்டியிடவிருக்கிறது! 15 உறுப்பினர்களைக் கொண்ட அந்த நகர மன்றத் தேர்தலில் தி. மு. கழகத்தின் சார்பில் 9 பேர் போட்டியிடுகிறார்கள் என்ற மகிழ்ச்சி தரும் செய்தியினைக் கருநாடக மாநில தி. மு. க. செயலாளர் திரு. எஸ். வி. பதி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்! அந்த செய்தி நமக்குத் தேன்போல் இனிக்கிறது; காங்கிரசுக்காரர்களுக்குத் தேள்போல் கொட்டுகிறது! கழகத் தோழர்கள் மட்டுமின்றி கழக ஆதரவு பெற்ற சுயேச்சை அபேட்சகர்கள் சிலரும் போட்டியிடுவர் எனத் தெரிகிறது!

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் போட்டியிடுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டதும் காங்கிரசார் அச்சப்படத் துவங்கியுள்ளனர்; காரணம் இரியூரைப் பொறுத்த வரையில் எல்லா அகில இந்தியக் கட்சிகளுக்கும் கிளைகள் உண்டு என்றாலும், தி. மு. கழகத்திற்கு இருப்பது போன்ற மகத்தான மக்கள் ஆதரவு வேறு எந்த அரசியல் கட்சிக்கும் கிடையாது! அதை அவர்கள் உணர்ந்துள்ளனர். அதன் விளைவு இது : காங்கிரசார் நம்மோடு "தேர்தல் ஒப்பந்தம்" செய்துகொள்ளவும் முன் வந்தனர்; சில இடங்கள் உங்களுக்கு விட்டுக் கொடுத்துவிடுகிறோம் என்றெல்லாம் பேசிப் பார்த்தனர். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் தேர்தலில் வெற்றி பெறுவதுமட்டுமே நமது நோக்கமில்லை. "நமது அடிப்படைக் கொள்கைகளை கன்னட மக்கள் ஏற்றுக்கொள்கின்றனரா? அதற்கு எந்த அளவிற்கு ஆதரவு வளர்ந்துள்ளது?" என்பதையெல்லாம் நாம் தெரிந்துகொண்டாக வேண்டும்! அதற்கான ஒரு நல்ல வாய்ப்பாக மட்டுமே நாம் இந்தத் தேர்தலை எண்ணிக்கொண்டிருக்கிறோம். தமிழகத்திலே நமது தோழர்கள் பெற்று வருவது போன்ற மகத்தான வெற்றியை நாம் பெறமுடியாவிட்டாலும், ஓரளவிற்கு வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை நமக்குண்டு!

இரியூரின் இன்றைய அவசரமான தேவைகள் கல்வியும் சுகாதாரமும் தான்! எந்தத் தொழிற்சாலையுமே இல்லாத அவ்வூர் மக்கள் முழுக்க முழுக்க உழவுத் தொழிலை மட்டுமே நம்பிக்கொண்டிருக்கிறார்கள்! மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் பரம ஏழைகளாக - அன்றாட வாழ்க்கைக்குக் கூலி வேலை செய்து பிழைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வாழ்கின்ற இல்லங்களும் வெறும் குடிசைகள்தாம். ஏழ்மையில் உழன்று வாழ்க்கை நடத்தும் அவர்கள், அடிக்கடி, பல தொல்லைகளுக்கு ஆளாகின்றனர். அண்மையில்கூட ஒரு பெரும் தீ விபத்து ஏற்பட்டு ஏராளமானோர் தொல்லைக்கு ஆளாயினர்; உடமைகளை இழந்தனர்; அன்று அல்லல்பட்டோருக்கு தி. மு. கழகம் தன்னாலான உதவிகளைச் செய்து அவர்கள் கண்ணீரைத் துடைத்தது; நகருக்குள் இருக்கும் அத்தகைய குடிசைகளை அழித்து, ஏழைத் தொழிலாளர்கள் வாழ்வதற்கு வசதியான வீடுகளைக் கட்டித் தருவதில் நகராட்சி மன்றம் கவனம் செலுத்தியாக வேண்டும். அடுத்து ஏழைமக்கள் வாழ்கின்ற பகுதிகளில் வழக்கமாக இல்லாமையினால் ஏற்படுகின்ற சுகாதாரக் குறைவு; அதனால் ஏற்படுகின்ற நோய்கள் இவைகளைத் தடுத்தாக வேண்டும். நகராட்சி மன்றத்தின் தலையாய கடமைகளில் மிக முக்கியமானது அதுதான்!

ஏறத்தாழக் கன்னட மக்களும் தமிழரும் சரிசமமான எண்ணிக்கையுள்ள அந்நகரில் கன்னட மொழி பயில்வதற்கென்று ஓர் ஆரம்பப் பள்ளி முதல் உயர்நிலைப்பள்ளிவரை உடனடியாகத் தேவை! இரியூரிலேயே பிறந்து வளர்ந்த தமிழர் குழந்தைகளுக்கு அது இன்றியமையாத் தேவையாகும். நகராட்சி மன்றம் அதையும் உடனடியாகக் கவனித்தாக வேண்டும்! நமது தோழர்கள் வெற்றிபெற்றுச்சென்றால் நிச்சயம் இந்தக் குறைகள் நீக்கப்படும். இயற்கை வனப்புமிக்க இரியூர் நகரம் நமது தோழர்களின் தூயபணியினால் மேலும் எழிலுடன் விளங்கப் போவது உறுதி! ஆனால் தேர்தலிலே நாம் வெற்றி பெற்றாகவேண்டும்! வெற்றிபெற வேண்டுமானால் - காங்கிரசை முறியடிக்க வேண்டுமானால், நமக்குப் பணம் தேவை! இரியூர் தேர்தல் குறித்துக் கருநாடக மாநிலச் செயலாளர் அன்பானதொரு வேண்டுகோள் விடுத்துள்ளார் நிதி தேவை என்று! தமிழகத்துப் பெருமக்களே! புரவலர்களே! கருநாடகத்தில் கழகம்வெற்றிபெற, கன்னடக் காளையர்போல் நீங்களும் உங்கள் காணிக்கையைத் தாரீர்! தாரீர்! ★

நக்கீரர் கழகம், சென்னை.

புலவர்கள், கவிஞர்கள் மூன்றாவது சுற்றுலா.

மேற்படி கழகச் சார்பில் மூன்றாவது சுற்றுலாவாக ஏப்ரல் 30, மே 1-ம் நாள் "**திருப்பாச்சூர், திருவாலங்காடு, பழையனூர், திருவரல்**" முதலிய இடங்களுக்குச் செல்லத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாவில் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள், டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள், பேராசிரியர் மயிலை சிவமுத்து, மயிலை சீனி வேங்கடசாமி, வல்லை பாலசுப்பிரமணியம், பி. ஏ., டி. ஏ. வி. நாதன், பி. ஏ., பி. எல்., பாலசுப்பிரமணியம், எம். ஏ., புலவர் தணிகை உலகநாதன், அழ. வள்ளியப்பா முதலியவர் கலந்துகொள்வர்.

சுற்றுலா ஏப்ரல் 30 சனி மாலை சென்னையிலிருந்து புறப்பட்டு மே 1-ம் நாள் ஞாயிறு மாலை சென்னை வந்து சேரும். பிற விரிவான நிகழ்ச்சிகள் பின்னர் வெளி வரும். விவரம்; செயலாளர் நக்கீரர் கழகம், 27, கொண்டலையர் தெரு, சென்னை-1 என்ற முகவரிக்கு எழுத வேண்டுகிறோம்.

அன்புள்ள,

ந. இனியன்,

செயலாளர்.

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

மதுரை-தென்னவர் கலைக் கழகத்தினர், தங்களது இதயப்பசியையும் இலட்சியப் பற்றினையும் விழாவாக்கிக் கொடுத்தார்கள். முத்துவும் சந்தானமும் பாராட்டுரைகள் வழங்கியபின் கண்ணதாசன் பேசினார்! கலையுலகச் செய்திகளைச் சொன்னபோது களிக்காத இதயம் எதுவும் அங்கே இல்லை! நடிக நண்பர் இராமசாமியின் நற்பண்புகளுக்கும் உரிய விழாவாக அது அமைந்ததுபோலவே அவரது உரையும் அமைந்தது! தனது தேர்தல் வெற்றியினைச் சொல்லி மகிழ்வித்தார்! இன்சுவையும் பயனும் தந்த தென்னவர் கலைக் கழகத்தாருக்கு நம் பாராட்டுதல்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமைகளை சில எருமைக் குணம் படைத்தோர் உணராத வகையில் நாடெங்கும் நடைபெற்று வரும் பல நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்றிருந்த மதுரை மக்கள், 12-4-60 வெள்ளியன்று சந்தைத் திடலில் கூடினர். "காங்கிரசுக்காரர்கள் கல்லறைக்குப் போகத் தயாராகிக்கொண்டிருக்கும் அவர்களது கடைசி நாட்களில் என்னென்ன இழிசெயல்களையெல்லாம் செய்வார்கள்? செய்யக் காத்திருக்கிறார்கள்?" என்பதையெல்லாம் தலைமை வகித்த முத்து அவர்கள் தனது முழக்கத்திலே தெரிவித்தார்! மழைத் தூரல் மிகுதியாகவும், மிரட்டுகின்ற மின்னலின் வேகம் அதிகமாகவும் இருந்தபடியால் கண்ணதாசன் அவர்கள் முதலில் பேசத் தொடங்கினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாற்றார்களையெல்லாம் கூண்டிலே நிறுத்திக் குற்றமும் தண்டனையும் பெறத்தக்கவர்களென்ற வகையில் கருத்துக்களைத் தொகுத்துக் கொடுத்தார். "கலகமும் கலவரமும் காங்கிரசுக் கட்சியினைக் காப்பாற்றிவிட முடியாது; கழகத்தின் பணிகளைத் தகர்த்துவிட முடியாது!" என்று சொரணை கெட்ட பேடிகளுக்கும் உடம்பிலே சூடு பிறக்கும் வகையில் வார்த்தைகளுக்கு நெருப்பாலே மெருகிட்டு சந்தைத் திடலிலே பரவவிட்டார். 'கல்லூரி மேடைகளில் கண்ட கண்ணதாசனைக் காண முடியவில்லை' - இப்படி எல்லோருமே சொன்னார்கள்! காரணம் என்ன? கண்ணதாசரின் பேச்சும் குரல் ஒலியும் நாசரை எதிரொலித்தன! "திராவிடத்தின் வளங்கள் இவையிவை. இல்லையென்று சொல்லும் மண்டலக் காங்கிரசுக்காரன் இருந்தால் பதில் சொல்! தமிழ்நாட்டுத் தலைவருக்குத் தெரிந்தால் பதில் சொல்! அமைச்சர்களுக்குத் தெரிந்தால் பதில் சொல்! இத்தனைக்கும் வக்கும் இல்லை; வகையும் இல்லை; இங்கே மேடை போட்டுப் பேச வருகிறீர்களா?" - இப்படியெல்லாம் கேள்விகளைத் தந்தபோது காங்கிரசுக்காரர்கள் - சந்து பொந்துகளிலே பதுங்கி நின்று கேட்டுக்கொண்டிருந்தவர்கள், ஒருமுழக் கயிறுதான் தேடிக்கொண்டிருக்க வேண்டும்! கேட்டுக்களித்த என் போன்றோர் தொகை - எண்ணிக்கை அதிகம்! இடைவிடாத கையொலியும் சிரிப்பொலியும் துள்ளியெழுந்தன!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் எழுச்சியினை உணராத ஏமாளிகளைப் பார்த்துக் கேட்டார்: "அண்ணா காங்கிரசில் சேர்ந்துவிட வேண்டும். சம்பத் இராசினாமாச் செய்துவிட வேண்டும். நெடுஞ்செழியன் சுதந்திராக் கட்சிக்குப் போய்விட வேண்டும் என்றெல்லாம் சொல்கிறாயே! - நாங்கள் எல்லாம் எங்கேயடா போவது!"-மேடை அதிர்ந்தது-பொதுமன்றம் திகைத்தது! "என்ன விளையாடுகிறீர்களா" - என்று தொடர்ந்தபோது விடுதலைக் குரலின் வீரக்கனை ஒலித்தது! சீனா - இந்தியா எல்லை விசயம் சுவையாக இருந்தது! "சீனாக்காரன் 5000 மைல் உள்ளே வந்துவிட்டான். ரோடுபோட்டுவிட்டான். இவன் கழுத்திலே கால் வைத்து உட்காரப்போகிறான்! இவர்களிடத்திலே இருப்பது சுடாத துப்பாக்கி; வெடிக்காத மருந்து! இருந்தாலும் சொல்கிறார்கள்." உள்ளே வராதீர்கள்; எச்சரிக்கிறோம். மீண்டும் கடுமையாக எச்சரிக்கிறோம்-விரட்டாதீர்கள். எங்கள் நாட்டுக்குள்ளேயே வந்து எங்களை விரட்டாதீர்கள். நாங்கள் ஓடிக்கொண்டிருக்கிறோம். இதோ இன்னும் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறோம். விரட்டாதீர்கள்!" என்றுதான் ஆட்சியாளர் பேசுவதாகச் சித்தரித்துச் சொன்னார். கேட்கும்போது இருந்த இனிமை எழுதும்போது இல்லைதான்! இறுதியில் கே. ஆர். ஆர். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுத்துகின்ற கொள்கை வழிச் சென்று நாட்டுப் பிரிவினையில் வெற்றி பெற அனைவரையும் அழைத்திட்டார்! மழைத்தொல்லை அதிகமாகவே கூட்டம் முடிந்தது. மதுரை மாவட்டம் இரண்டு நாள் சுற்றுப்பயணத்தில் மகிழ்ந்தது. செங்கற்பட்டு மாவட்டத் துணைச் செயலாளர் வகாப்-நட்புக்குச் சிறந்த நண்பர். சந்தித்து உடனிருந்து உவகையைப் பெருக்கினார். தங்கள் மாவட்டச் செய்திகளைச் சொல்லிக் கழகப்பணியின் பெருமையினைக் காட்டினார் - மிரண்டோடும் "மாடுகளின்" வேகத்தையும் விளக்கினார்! இரவு 11 மணி அளவில் 'பெருங்குடி'யில் நடைபெற்ற நாடக நிகழ்ச்சியில் பங்கேற்றபின் சுற்றுப் பயணத்திற்கு முடிவுகட்டினர்! சென்னை - காஞ்சீபுரம் நோக்கி இரண்டு வண்டிகளும் புறப்பட்டன-இதயத்திலே நிறைந்துவிட்ட அந்த இன்பநிகழ்ச்சிகளின் தொகுப்பு எண்ணியெண்ணி மகிழத்தக்கதாகும்! ★

தென்றல் வாசகர்களுக்குத் தேனான செய்தி!

★

தொடர்கதை யொன்று தொடங்குகிறது!

"விதி ஒரு சுழற்காற்று. அதிலே சிக்கித் தவிக்கும் சிறு துரும்புதான் இந்த மனிதப் பிறவி!"

"மதியுள்ளவர்கள் விதியை மதிப்பதில்லை. ஆற்றலும் அறிவும் முன்யோசனையும் உள்ளவர் பலர், வாழ்விலே தாங்கள் கருதிய பலனை அடைந்து வெற்றி கண்டிருக்கிறார்கள்!"

∴

"காதல் என்பது போதை தரும் ஒருநோய்!"

"துன்பத்தைத் தீர்க்கத் துணைசெய்யும் நன்மருந்து காதல். அதுமட்டுமல்ல, இன்பத்திற்கு இன்பம் சேர்க்கும் இன்னமுதமும் கூட!"

∴

இப்படிப்பட்ட கருத்துப் போராட்டங்கள், தத்துவச் சிந்தனைகள் நிறைந்தது.

மல்லிகைப் பந்தல்

நவரச எழுத்தாளர்

திரு. நாரா. நாச்சியப்பன்

எழுதும் தொடர் கதை.

இது ஒரு சமுதாயச் சித்திரம்!

காவியமாய்த் தீட்ட வேண்டிய கற்பனையோ கருத்து ஓவியமோ என்று கருதும்படியான இந்தத் தொடர் கதை, தென்றல் 14-5-60 இதழிலிருந்து தொடங்குகிறது.

அதிகப் பிரதிகள் வேண்டும் விற்பனையாளர்கள் முன் கூட்டியே அறிவிக்க வேண்டுகிறோம். இதழ் தவறாது தொடர் கதை படிக்க விரும்பும் வாசகர்கள் சந்தாதாரகளாகிவிடுவது நன்று.

நெஞ்சைத் தொட்ட கதை! நேரிழையின் வாக்குமூலம்!

“தோழி!”

“போடி.”

“என்னடி அதற்குள் கோபம்?”

“உன் இரகசியம் தெரியாதென்று எண்ணிஞயாக்கும்? உயிர்த்தோழியிடமே மறைக்கப்பார்க்கிருயே?”

தன் இரகசியத்தைத் தெரிந்துகொண்டு வம்புதான் செய்யப்போகிருள் என்பதைப் புரிந்துகொண்டாள் தலைவி. இரகசிய அறை என்னும் தன் இதயத்துச் சிறையிலுள்ள ஒவ்வொன்றையும் விடுதலை செய்கிருள்.

“கார் முகிற்கிடையே கண்ணுமூச்சி விளையாடும் ஒளிர் மின்னல் போல் ‘பளீர்-பளீர்’ என எழில் கூட்டும் தலை அலங்காரியே! தாழம்பூ சூடிய சிங்காரியே! புன்சிரிப்பால், புதுமையொளிர் பற்களால், போதை மிக்க மொழிகளால் வயப்படுத்தும் செவ்விதழ்ப் பெண்ணே!”

“இப்படியெல்லாம் உளறிஞை, உன்னைப் பார்த்த அவன்?”

“இல்லையடி உன் அழகைப் பற்றியல்லவா நான் கூறுகிறேன்.”

“நீ என்னைக் குளிப்பாட்டியது போதும். இப்பொழுதுதான், நான் ஆற்றில் குளித்துவிட்டு வருகிறேன். வர்ணனையிலேயே பொழுதை வழியனுப்பிவிட்டு, மழுப்பலாமென்று எணணுகிருயாக்கும்?”

“இருந்தாலும் நீ இப்படி அவசரப்படக்கூடாதடி. தேர்ந்த நெற்றியையுடைய தோழியே! சொல்கிறேன் கேள்!

தனியே வந்து கொண்டிருந்த என்னை நோக்கி, ‘நில்’ என்று கட்டளையிட்டான். அன்புக்கட்டளையாயிற்றே. நிற்காமல் இருக்கமுடியுமா? நின்றேன்! என் அருகே வந்தான். இதுவரை பெண்களையே பார்த்திராதவன் போல் நடந்துகொண்டான்.”

“அப்படி அவன் என்ன செய்தான்?”

“அப்பப்பா! அதை நான் ஒவ்வொன்ருகச் சொன்ஞல்தான் என் உள்ளம் நிறைவு பெறும்போல் தோன்றுகிறது. என் முகத்தைப் பார்த்தான்; கண்களைப் பார்த்தான். நெற்றியைப் பார்த்தான்; தோளைப் பார்த்தான். பார்த்ததோடு நிற்காமல் வார்த்தைகளால் வண்ணங்கூட்டவும் ஆரம்பித்தான்.

‘பிறையா? நெற்றியா?’ என ஐயங்கொண்டான். அதனைத் தெரிவிக்கும்படி என்னை நோக்கினுன். நாஞ தெளிவிப்பேன்? பின் அவனுகவே ‘பிறையல்ல, நெற்றியே தான்!’ எனத் தெளிந்துகொண்டான்.

‘பூமதியா? அல்லது முகமா?’ என்றவன் அடுத்த கணமே, ‘வானத்து நிலவே வதனமாக வாய்த்திட்ட வனிதாமணிதான்’ என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

‘இளம் மூங்கிலா? தோளா?’ என்று கேட்டுக்கொண்டவன், ‘மூங்கிலென்ருல் அதன் பிறப்பிடமான மலை இல்லையே. எனவே நிச்சயமாக இது தோள்தான்!’ என உறுதிப்படுத்திக்கொண்டான்.

‘வண்ண மணமலரா? அல்லது வாஞ்சையொளி வீசும் கண்ணு?’ என்ற கேள்வியைக் கிளப்பியவன், ‘அல்ல! அல்ல! மலரென்ருல் அதன் பிறந்தகமான சுனையையடுத்த நிலம் இருக்கவேண்டுமே! அதுதான் இல்லையே! நிச்சயம் மலரல்ல; மைவிழியே தான்!’ என தன் ஐயத்தை அகற்றிக்கொண்டான்.

எங்கே அவனது முகமன் சொற்களால் மயங்கிச் சாய்ந்து விழுந்து விடுவேனே என்றெண்ணியவளாய் சற்று அடியெடுத்து வைத்தேன். நடையைக் காட்டியபிறகும் விட்டாஞ அந்தப் பித்தன்!

‘ஆகாகா! நடையா இது? மயிலின் களிநடம் அல்லவா!’ என்று சற்று உரக்கவே கூறியவன் ‘மயில் அல்ல; மங்கையே தான்!’ என நிச்சயமாகத் தெரிந்து தன் அறியாமையை எள்ளி நகையாடுபவன்போல் ஒரு சின்னச் சிரிப்பை உதிர்த்தான்.

இனியும் பேசாமலிருத்தல் தகாது. நாமும் ஏதாவது சொல்லி வைப்போம் என்று வாயெடுத்தேன். நா குளறியது. சொற்கள் தடுமாறின. வார்த்தைகள் வரவே இல்லை. அதற்குள் சும்மா இருப்பாஞ அவன்?

‘ஆகாகா, கொஞ்சு மொழி கூறும் கிள்ளையோ?’ என்ற ஐயத்தை எழுப்பியவன், ‘அல்ல, அல்ல, அழகுப் பெண்ணுள் தான்!’ என அறுதியிட்டுக் கூறுபவன்போல் உரக்கவே கூவினுன்.

அவனது வார்த்தையின் வண்ணங்களில் வயப்பட்ட எனது நெஞ்சம் மகிழ்வுடன் கொஞ்சியது. அந்த இன்ப உணர்விலேயே இலயித்து நின்றேன்.

தருணம் பார்த்துக்கொண்டிருந்த அந்தத் தலைவன், மானைக் கண்ணி வைத்துப் பிடிக்க வரும் வலையர் போல் என்னைச் சுற்றிச் சுற்றி வந்தான். சுவைக்கனி உண்டவன் போல் மகிழ்ந்தான்; வியந்தான்; சுவைத்தான்.

அவனது மகிழ்விலே என்னை நான் மறந்தேன. அவ்வளவுதான் ‘ஆகா பலித்துவிட்டது’ என்பதைப் புரிந்துகொண்டான்.

அதோடு சும்மா இருப்பாஞ அந்தச் சுந்தரச் சொல்லாளன்? செயலாளனுகவே மாறிவிட்டான். என்னைத் தொட்டுப் பார்த்தான் அவன்! தட்டிக் கேட்கவில்லை நான்! கட்டித் தழுவினுன் அவன்! எட்டிச் செல்லவில்லை நான்! மேலும் தழுவினுன். பன்முறை தழுவினுன்! வெறி பிடித்தலையும் மதயானையைப்போல வெறிகொண்டு கட்டித் தழுவினுன்.

‘அதுவரை நீ அங்கிருக்கலாமா?’ என்று நீ கேட்கலாம்.

கீழ்த்தரமாக நடக்கும் குடிகேடனல்ல அவன். அறிவிற் சிறந்தவன் அருங்குணத்தில் பிறந்தவன். உள்ளத்தே அன்பு நிறைந்தவன். எனவே அவனது பிடியினின்று நழுவாது பேரணைப்பைச் சுவைத்தேன் தோழி! தயவுடன் தழுவும் தலைவனது பிடியினின்றும் நழுவலாமா தோழி? தழுவும் தென்றலுக்கு மகிழும் முல்லைதானே நான்!”

இப்படித் தன் கதையைச் சொல்லி முடித்தாள் தலைவி. இந்தக் கதையை இன்னும் சுவைக்க வேண்டுவோர், குறிஞ்சிக்கலியில், “மின் ஒளிர் அவிர் அறல்” என்று தொடங்கும் பாடலைக் காண்க.

—சி. தமிழன்பன்

— — “கல்வி” — —

ஆங்கிலம் எளிய தமிழ் விளக்கத்துடன் எழுதவும் படிக்கவும், பேசவும் ஒரே வருடத்தில் தபால் மூலம் கற்றுக்கொடுக்கப்படும்.

மாதம் ரூ. 2

விபரங்கள் இலவசம்.

தி நியூ கல்வி அசோசியேஷன்,

திருப்பூர் (கோவை மாவட்டம்)

தலைமைக் கழக அறிக்கை: 6/60.

உறுப்பினர் சேர்த்தல்-புதுப்பித்தல்.

1. தலைமைக் கழக அறிக்கை 11/59-ன்படி 31-9-59-ம் நாளுக்குள் பதிவு செய்துகொண்ட உறுப்பினர்கள் மட்டுமே தலைமைக் கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

2. பின்னர் மாவட்டச் செயலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க 31-12-59-ம் நாளுக்கும் பதிவு செய்துகொண்ட உறுப்பினர்களும் தலைமைக் கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

3. உறுப்பினர்களைச் சேர்த்தும் புதுப்பித்தும் வைத்துக்கொண்டு தவிர்க்கமுடியாத காரணங்களால் குறிப்பிட்ட நாளுக்குள் அனுப்பத்தவறிய கிளைகளின் வேண்டுகோளுக்கிணங்க, அவைகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர் விண்ணப்பத்தாள்களை தலைமைக் கழகம் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் **1960 மேத் திங்கள் 10-ம் நாள்** என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது!

4. 1960 மேத் திங்கள் 10-ம் நாளுக்குப் பின்னர் அனுப்பிபெறும் விண்ணப்பத் தாள்கள், 1960 அக்டோபர் திங்கள் 1-ம் நாளுக்குப் பிறகுதான், பதிவு செய்துகொள்ளப்பட்டு உரிமைச் சீட்டுக்கள் வழங்கப்பெறும்.

அறிவகம், சென்னை-13,
22-4-’60

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★

தலைமைக் கழக அறிக்கை எண் 7/60.

மே நாள் விழா

மே முதல்நாளை, உலககெங்கணுமுள்ள பல்வேறு வகைத் தொழிலாளர்கள் ஆங்காங்கு ஒன்று கூடி, தமக்குள்ள ஒற்றுமையுணர்வை நிலை நாட்டுவதற்கும், உரிமைகளை வற்புறுத்துவதற்கும், தமக்குள்ள தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் தம்முடைய நல்வாழ்வுக்கான வழி வகைகளை அமைத்துக்கொள்வதற்கும் உரிய நாளாகக் கொண்டாடி வரும் மரபையொட்டி, இவ்வாண்டும் மே முதல் நாளை **மே நாள் விழா**வாகக்கொண்டாடுமாறு திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளையும், துணைச்சார்பு மன்றங்களையும், கழகத் தோழர்கள் பங்கேற்றுப் பணியாற்றும் தொழிற் சங்கங்களையும் கேட்டுக்கொள்கிறோம்!

தொழிலாளர்களின் உரிமைகள், தேவைகள் ஆகியவைகளை விளக்கும் அறிக்கைகளை வெளியிடுதல், அமைதியான முறையில் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்துதல் போன்ற முறைகளில் விழாவைக் கொண்டாட வேண்டுகிறோம்!

அறிவகம், சென்னை-13,
22-4-’60.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. க.

நெருப்பு

வீடுகட்டி வாழுகின்ற மாந்தர் அந்த
வீட்டுக்குள் ஓர்அறையில் இருப்பர். நானே
கூடுகட்டி இருக்கின்ற அடுப்புக் குள்ளே
குடியிருப்பேன்; வாடகையோ தரவே மாட்டேன்!
ஓடிவரும் பூனைக்குச் சிலநே ரத்தில்
உட்கார, கண்ணுறங்க இடங்கொ டுப்பேன்!
சூடுதரும் ஒளிதான்நான்! அதனு லென்ன?
சுகவாழ்வு நானின்றேல் உங்கட் கில்லை!

மூக்காலே இழுத்துவிடும் காற்றை நீங்கள்
மூச்சென்று சொல்கின்றீர்! அந்த மூச்சு
மூக்கிழுப்பு வேலைஎனக்(கு) உண்டு! மேலே
மூண்டுஎழும் புகைச்சுருள்தான் எனது மூச்சு!
நாக்குண்டே உடம்பெல்லாம் எனக்கும்! அந்த
நாக்கினையே ஏணிவைத்து விரைந்து பற்றி
ஊக்காமாடு கூரையின்மேல் ஏறிக் கொள்வேன்!
'ஓ'வென்றே ஊர்முழுதும் கதற வைப்பேன்!

வெடிமருந்தைப் பேசவைப்பேன்! வெட்டும் மின்னல்
கொடிகளிலே சிறகடித்துக் கொண்டி ருப்பேன்!
வெடித்துவிழும் பஞ்சுமகள் என்னைப் பார்த்தால்
வெடுக்கென்றே இழுத்தணைப்பாள்; முத்தம் வைப்பாள்!
குடிக்கின்றேன் உங்களைப்போல் நானும்! அந்தக்
குடிதண்ணீர் எதுஎன்று கேட்கின் றீரா?
வடித்தெடுத்த மண்ணெண்ணெய் தானெ னக்கு
வற்றாத போதைதரும் கள்ளின் ஊற்று!

விலைபோட்டே எனையாரும் வாங்க மாட்டார்
வீட்டுக்கு வீடுநான் இருத்த லாலே!
மலைச்சரிவில், தழைக்காட்டில், மூங்கில் வீரர்
மற்போரில் ஈடுபட்டால் மறுக்கா மல்நான்
அலையலையாய் உயிர்பெற்றுப் பாய்வேன்; வீசி
அணையாமல் சோதிமழை பெய்வேன்! நீண்ட
மலைமார்பில் வளைவாகத் தொத்திக் கொண்டு
மங்காத மணியாரம் போலி ருப்பேன்!

வானகத்திலே சுற்றும் நெருப்புக் கோளம்
வையகத்தின் முறைவிளக்கே எனக்குத் தந்தை!
கானகத்திலே இருக்கும் புலியும் என்னைக்
கண்டுவிட்டால் நடுநடுங்கும்; கலங்கி ஓடும்!
நானெதற்கும் அஞ்சாத வீரன்! தெற்கு
நாடுபெற்ற வரலாற்றில் இடமும் பெற்றேன்!
தேன்கவிதை ஈன்றெடுத்த மதுரை நாட்டைத்
தின்றுமிழ்ந்தேன்? வளவன்கால் சுவைத்தும் உள்ளேன்!

சிறப்பாக என்பெயரை முன்னே சேர்த்துத்
தன்பெயரைச் சொல்கிறது 'நெருப்புக்' கோழி!
மறக்காத நல்லமனம் அதற்கே உண்டு!
மனிதர்க்கோ நன்றியில்லை; துளியும் இல்லை!
அறுப்பதற்கென் றேஎனது கழுத்தை மண்ணில்
அமைத்துள்ளீர் தீயணைப்புப் படையை! வீரர்
சுறுசுறுப்புக் காட்டுகின்றார்! என்னைத் தாக்கிச்
சுற்றிபல நீர்க்கணைகள் பீச்சு கின்றார்!

எனைமுட்டிச் சோறுக்கி வடித்துத் தின்று
எடைபெருக்கிச் சதைவளர்க்கும் உடம்பை மீண்டும்
எனைமூட்டிப் 'பிணம்'என்று கொடுக் கின்றீர்கள்!
எடுத்துண்ண நானென்றும் மறுத்த தில்லை!
எனைத்தொட்டால் புண்ணாகும் கைகள் என்றே
எப்பொழுதும் விலக்கிவைத்தீர்! ஆனால் இன்றோ
எனைத்தொட்டால் தான்உங்கள் எச்சில் நாற்றம்
எடுக்காது என்பதனை உணர்ந்தீர் போலும்!

—வல்லம் வேங்கடபதி.

திராவிடத்தின் வீதிதோறும் ஒலிக்க, நகரமன்றத்தின்
முன்நாள் ஊழல்களை அம்பலப்படுத்த அஞ்சாமல்
வருகிறது

"ஞாயிறு"

(தி. மு. க. வார இதழ்)

ஆசிரியர் : சிட்டிபாபு எம். சி. ★ துணை ஆசிரியர் : அன்புரோசு

விற்பனையாளர்களும் சந்தாதாரர்களும் விண்ணபிக்கவும்.

ஆண்டு சந்தா 8. வெளி நாடு 10-8-0

விண்ணப்பிக்கவும் :

ஞாயிறு அலுவலகம்,
5, குப்புமுத்து முதலி தெரு,
சென்னை-5.

புள்ளின் பாதை

காட்டு வெளியும் வெற்பும்
ககனத்து மார்க்கம் மற்றும்
வாட்டிடும் வாடை வெயில்
வன்வேடர் தொல்லை எல்லாம்
வாட்டினும் உரிமை ஒன்றே
வாழ்க்கை யென்றுவக்கு மெம்மை
கேடுடை கயவர் கூட்டில்
கிடத்தும் வன்செயலென் சொல்வோம்?

மொழிக்குலம் தன்னைத் தத்தம்
மொழியினர் உயர்வாய் ஏற்கச்
செழித்திடும் மொழிமேல் ஒன்றைச்
செலுத்தி மற்றொன்றை மாய்க்க
அழிவெனும் வலைவிரித்தே அடிமை
வாழ்வ மைக்குந் தீய
இழிவுளம் பூண்டார் நாளும்
இழைத்திடும் கொடுமை ஒப்ப

கழனி மற்றிடத்தில் சென்று
கதிர்மணி பொறுக்கி வந்தே
எழினடைக் குஞ்சிற் கெல்லாம்
ஈந்துமே இணையும் காதல்
மொழியுரைத் துவந்தே எம்மில்
மோதிடும் தடையில் வாழ்வை
விழியிலார் வலையில் வீழ்த்தி
வீண்சிறை செயலென் சொல்வோம்?

காதலா லிணைந்தே இன்பக்
களிப்பினில் திளைத்து மூழ்க
சூதிலா வினமாய் ஒன்றி,
சுகவளம் பெருக்கி வாழச்
சாதலை அளிக்கத் தீயோர்
சார்ந்துமே பிரித்துத் துன்ப
வேதனை அளித் தெம்மையே
வீண்சிறை செயலென் சொல்வோம்?

அமைதியாம் அமைதி என்றே
ஆறறி வுடைய மக்கள்
இமைநிறை விழிகள் தம்மை
எதிரிகள் பறித்த பின்னும்
சுமையெனப் பொருத ஏற்றல்
சும்மையால் பெறுதல் வேண்டி
அமைந்துமே ஆமை யன்ன
ஆற்றலை இழத்தல் கண்ட

புள்ளினம் என்ன செய்வோம்?
பொருதிடப் படையு முண்டா?
எள்ளிட வாழோம் எம்மில்
இருந்திடின் பகையை மாய்த்தே
தொல்பழம் உரிமை மீட்கத்
துறக்குயிர் பெரிதாய் எண்ணோம்!
உள்ளமும் உணர்வும் மற்று
உறங்கிடோம்; பெற்றே தீர்வோம்!

—சிவகங்கை மணியம்.

13-வது இதழ் விற்பனையாகிறது!
தம்பி, தங்கையரின் வார ஏடு!

தேன்

ஆசிரியர்: வி. சி. தமிழ்தாசன்
விலை 10 காசு.
ஆண்டுக் கட்டணம் ரு. 5.
இதழ் ஒன்றுக்கு 50 காசு முன்பணம் கட்டும்
விற்பனையாளர்கள் தேவை.

"தேன்" சென்னை-1.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6 தமிழ்நாடு.
தொலைபேசி எண் 83510.